உ

குருபாதம்

# ஞானசம்பந்தம்

மலர் 37 | பிங்கள - தை - 10—2—78 | இதழ் 3

திருச்சிற்றம்பலம்

பொன்தயங் கிலங்கொளிந் நலங்குளிர்ந்த புன்சடை
பின்தயங்க ஆடுவாய்! பிஞ்ஞகா! பிறப்பிலீ!
கொன்றையம் முடியினாய்! கூடலால வாயிலாய்!
நின்றயங்கி யாடலே நினைப்பதே நியமமே. — சம்பந்தர்.

திருச்சிற்றம்பலம்

## வேர்க்காலுக்கு நீர்

**நீர் இன்றி விளைவில்லை :**

வித்தின்றி விளைவு இல்லை: நெருப்பின்றிப் புகை இல்லை: தாய் இன்றி மகவில்லை: உலகில் எந்த ஒரு காரியமும் அதற்கு அடிப் படையான காரணம் இன்றி நிகழ்வதில்லை. காரியம் - விளங்கித் தோன்றுவது ; காரணம் நுட்பமானது ; நுணுகி ஆராய்ந்து அறிய வேண்டியது. நாடு விடுதலை பெற்று ஆண்டுகள் பல கடந்தன. திட்டங்கள் பல தீட்டப்பெற்றன. ஆயினும் மக்களிடையே சுபிட்சம் மலரவில்லை. நிம்மதி நிலவவில்லை. எவரிடமும் பூரண அமைதி இல்லை. இந்த நிலை ஏன்? வேர்க்கால்களில் நீர் பாய்ச்சாமல் விளைவு வரும் என எப்படி எதிர்பார்க்க முடியும்? ஆம் சமுதாய வாழ்வுக்கு அடிப்படையான தெய்வ - அற நிலையங்களைப் போற்ற மறந்ததும், தெய்வ பக்தியில் ஏற்பட்ட தொய்வுமே இன்றைய சமுதாய வீழ்ச்சிக்கு உண்மைக் காரணங்களாகும்.

**ஏன் இந்த அவல நிலே ?**

இருக்குமிடத்தில் இருந்து மின் விசிறியிஜனச் சுழலவிடு கிரும். மின் விளக்கிஜன ஏற்றுகின்ருேம். வானுெலிப்பெட்டி ஒலி வழங்குகிறது. இவை எப்படி நிகழ்கின்றன. மின்சாரத்தைத் தோற்று விக்கும் நிலையங்களின் முறையான பராமரிப்பும், முயற்சியும் இல்லாதுபோனுல் வீட்டிலே இன்பம் எப்படி வரமுடியும் ? சமுதா யத்தின் உண்மையான நிறைவுக்குக் காரணமாவன கடவுள் நிலையங் கள் என்று தெரிந்து போற்ருது, அவற்றை நாம் புறக்கணித்ததால் தான் இந்த அவலநிலையில் நாடு தடுமாறுகிறது. இதஜனக் கற்றறிந்த அஜனவரும் அறிவர்.

**சிந்திக்கவேண்டிய ஒரு விந்தை !**

இந்தியநாட்டுக்குப் பெருமை எல்லாம் அதன் ஆன்மீக வளர்ச்சியில்தான் என்பதை உணர்ந்து உலகம் வியக்கிறது. அதிலும் குறிப்பாகத் தமிழ்நாட்டின் பெருமை, இங்குள்ள வானளாவிய கோயில்களிலும், அதன்வழி விஜளந்த பண்பாட்டிலுந்தான் என்பதை மறுத்தல் இயலாது. தமிழ்நாடு அரசின் சின்னத்தில் பொறிக்கப் பட்டிருக்கும் கோபுரச் சின்னம் இந்த உண்மையிஜன வலியுறுத்தும். தமிழகத்து ஆலயங்கஜளயும், அவற்றின் அழகையும் காட்டி உலகவர் கஜள ஈர்க்கும் அரசு, இவ்வாலயங்கள் மற்றும் அறநிலையங்களின் வளர்ச்சியில் முட்டுக்கட்டை நிலையை ஏற்படுத்திவரும் விந்தையிஜனக் கூருது இருக்க இயலவில்லை. எந்த அரசு என்பது கேள்வியில்லை. கடந்த 25 ஆண்டுகளுக்கு மேலாகத் தமிழ்நாட்டில் அடுத்தடுத்து வரும் அரசுகள் தமிழகத் திருக்கோயில்களின் உண்மையான நோக் கத்திஜன உணர்ந்தோ அன்றி உணராமலோ, அவற்றின் வளர்ச்சிக் குத் தடைபயக்கும் செயல்கஜளயே செய்துவந்திருக்கின்றன.

**அறநிலைய வளர்ச்சியில் அரசின் பங்கு என்ன ?**

ஒரு உண்மையிஜன இங்கே சிந்திக்கவேண்டும். அரசு, தன் வருவாயில் கல்வி, மருத்துவம், பொது சுகாதாரம் போன்ற பலவற் றிற்குப் பெருந்தொகையிஜன ஆண்டுதோறும் செலவிடுகிறது. ஆனுல் தமிழ்நாட்டில் உள்ள திருக்கோயில்கள், திருமடங்கள் போன்ற அற நிறுவனங்களின் வளர்ச்சிக்காக அது செலவேதும் செய்வதில்லை. சமூகத்தில் பல அடிப்படைத் தேவைகஜளப் பூர்த்திசெய்யும் பொறுப்பு ஆளும் அரசுக்கு உண்டு. ஆனுல், கல்வி, மருத்துவம், அனுதைக் குழந்தைகளின் பராமரிப்புப் போன்ற பலவாகிய தன் கடமைகஜள இங்கே அரசு அறநிலையங்களின் மேல் சுமத்துகின்றது. எனவே, சமய வளர்ச்சிக்கு என்று கிடைக்கும் நிதிகளும், அதற்கு

முழுமையாகப் பயன்படாது போய்விடுகின்றன. இதர வழிகளில் வருவாய்க்கு வழி இல்லாத அறநிலையங்களின் வருவாயை, சமய வளர்ச்சி அல்லாத இதர வழிகளில் செலவிட வற்புறுத்தும் விந்தையான போக்கு தமிழ் நாட்டில் கடந்த பல ஆண்டுகளாகக் காணப்படுகின்றது.

**அறநிலைய வருவாய் :**

இந்நிலையங்கள் அங்கங்குள்ள மக்களின் வாழ்க்கை நிலை, சூழல் முதலியவற்றிற்கு ஏற்ப சிலவருவாய் வசதிகளைப் பெற்றுள்ளன. நகரப் பகுதிகளில், கட்டிடங்கள், கடைகள்வழி கிடைக்கும் வாடகைகள்; கிராமப் பகுதிகளில் நஞ்சை புஞ்சை நிலங்கள், தோப்புத் துரவுகள் இவற்றிலிருந்து கிடைக்கும் குத்தகைகள் இவற்றால் தமிழ்நாட்டு அற நிலையங்கள் தொன்று தொட்டுப் பரிபாலிக்கப்பட்டு வருகின்றன. தஞ்சை மாவட்டத்தைப் பொறுத்தமட்டும் நிலவருவாய் ஒன்றை மட்டுமே நம்பி ஆயிரக்கணக்கான அற நிலையங்கள் இயங்கவேண்டியுள்ளன. இந்நிலங்கள் மிகக் குறைந்த குத்தகைக்குக் குடிமக்களிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளன. பல ஆண்டுகளாக அறநிலையங்களின் வளர்ச்சி குன்றும்படி இந்நில வருவாய்கள் முறையாக வருதல் குறைந்து போயிற்று.

**உள்நோக்கமுடைய செயல்கள் :**

நோக்கம் வேறாக இருந்தாலும், ஏழை மக்களுக்கு நன்மை செய்வதாகக் காரணங் கூறிப் பல ஆண்டுகளாக அரசு, இந்நில வருவாயை எவ்வகையாலும் அற நிலையங்கள் பெறஇயலாதவாறு அவ்வப்போது சட்டங்கள் இயற்றித் தடைசெய்து வருகின்றது. ஜமீன் ஒழிப்பு, எஸ்டேட் ஒழிப்பு என்று தொடங்கியகாலம் முதல் அற நிலையங்களும் பாதிக்கத்தொடங்கின. இதில் ஓர் வியப்பு; அறநிலையங்கள் ஜமீனோ, எஸ்டேட்டோ அல்ல என்றாலும், இவையும் பாதிக்கப்பட்டன. குத்தகைப் பாக்கியைப் பெற அறநிலையங்களுக்கு உரிமை மறுக்கும் அரசு, நிலவரியையும் தள்ளுபடி செய்திருக்குமானால் அதிலே ஓர் நடுநிலைமைத்தன்மையாவது காணப்பட்டிருக்கும். தம்மிடமிருந்த அடிப்படை நிதிகள் சேமிப்புக்கள் இவற்றால் இதுவரை நடத்துவந்த இந்நிலையங்கள் இப்போது, தொடர்ந்து நடையிட முடியாத துயரநிலைக்கு ஆளாகியுள்ளது.

**தொடர்ந்துவரும் துன்பநிலை :**

ஒருபக்கத்தில் தீவிர சாகுபடித் திட்டத்தால், நாட்டின் விளைவு நிலை இருமடங்கு, மும்மடங்கு உயர்ந்திருக்கிறது என்னும்

**அறிவிப்புக்கள்:** இன்றொருபக்கத்தில் சரியானவிளைவு இல்லாமையால் குத்தகைதாரர்களின் பாக்கிகளை வசூலிக்கத் தடைச்சட்டம் இயற்றுதல் என்ற வேடிக்கையைப் பல ஆண்டுகளாகத் தமிழ்நாடு கண்டு வந்திருக்கிறது. இது போது தமிழ்நாடு அரசு இவ்வாண்டும், உரிய குத்தகைப் பாக்கிகளை அறநிலையங்கள் சட்ட பூர்வமாகக்கோரிப் பெறும் உரிமையைத் தடைசெய்து சட்டம் ஒன்று இயற்றியிருப்பதாகத் தெரிகிறது. உண்மையில் இந்நிலை பெரிதும் வருந்தத்தக்கதேயாகும். தமிழ்நாட்டில் வேரூன்றி விளங்கும் சமய நம்பிக்கையும், அதற்குக் காரணமாக விளங்கும் திருக்கோயில்களும் **அரசின் நடவடிக்கைகளால்** மெல்ல மெல்ல வலிகுன்றிப் போகின்றன. சமயத்தின் சார்பில் அதற்குத் தீங்குவருங்கால் கூக்குரல் இடுவார் இல்லை என்ற நிலை இங்கே காணப்படுவது ஒரு பெருங்குறை.

**நினைவுகூரத்தக்க உண்மை :**

திருக்கோயில், திருமடங்கள் போன்ற அறநிலையங்கள், யாரோ ஒரு சிலரது நல்வாழ்வுக்காக இயங்கிவரவில்லை. கோடிக்கணக்கான மக்களின் அகவாழ்வின் நிறைவிற்கும், பண்பாட்டு வளர்ச்சிக்கும் உத்திரவாதமாக விளங்கும் இவை, தம்மைப்பரிபாலிக்கும் லட்சக் கணக்கான ஊழியர்களுக்குச் சோறிடும்கடமை உடையது என்பதைப் பலரும் நினைவுகூர்வதில்லை. உண்மையில் அரசாங்கம் என்ற ஒன்று எதற்கு என்று கேட்டுக்கொண்டால் விடை, மக்களுக்காக எனவரும். அரசு மக்களிடமிருந்து வரி வசூலிப்பது எதற்கு? மக்களின் பொது நலங்களைப் பேணவும், அரசின் திட்டங்களைச் செயற்படுத்தும் ஊழியர்களுக்கு ஊதியம் வழங்கவுமே என அறியமுடிகிறது. மக்களிடமிருந்து பெற வேண்டிய வரிகளைத் தொடர்ந்து தள்ளுபடி செய்து, அவற்றை ஒரு அரசு பெறமுடியாமல் போனால், அவ்வரசு எவ்வாறு இயங்க இயலும்? இவ்வுதாரணத்தை இன்றைய சூழ்நிலையில் அறநிலையங்களின் நிலையோடு ஒப்பிட்டால், அவற்றின் உண்மையான நிலைமை நமக்குப் புரிந்துவிடும். அரசின் தொடர்ந்த ஒருபக்கமான இத்தகு நடவடிக்கைகளால், உலகம் புகழும் தமிழக அறநிலையங்களின் நடைமுறை வளர்ச்சிகுன்றி, அங்கே பணியாற்றும் லட்சக்கணக்கான ஊழியர்கள் பல திங்களாக ஊதியம் பெறவும் மாட்டாதநிலை உருவாகி இருக்கிறது.

**அரசின் முடிவை ஆவலுடன் எதிர்பார்க்கிறோம் :**

தற்போது புதிதாகப் பதவியேற்றிருக்கும் அரசும், அதன் முதல்வரும், பக்தி மற்றும் அறநிலையத்தின் உண்மையான வளர்ச்சி இவற்றில் பெரிதும் நாட்டமுடையவர்கள் ' என அறிகிறோம். முதல்வரின் தூய்மையான - நேர்மைமிக்க ஆட்சிமுறை ஆறுதலாக

அமைகிறது. இருந்தும், இவ்வாண்டு அரசு குத்தகைப் பாக்கிகளைச் சட்ட பூர்வமாகப் பெறும் உரிமையை அறநிலையங்களுக்கு மறுத்திருப்பது பெரிதும் வேதனை தருவதாக உள்ளது. மக்கள் நலம்பேணுவது அரசின் கடமைதான் என்றாலும், மக்களின் ஆன்மீகவளர்ச்சி நிலையங்களாக விளங்கும் அறநிலையங்களைப் பேணும் பொறுப்பும் அரசுக்கு உண்டல்லவா ? எதிர்க்கட்சியாளர்களும் இம் முயற்சியில் இணைந்துவிடாமல், அரசின் கவனத்திற்கு இந்நிலையங்களின் இன்றைய நிலைமைகளை விளக்கி, உரிய பரிகாரம் காண உதவுதல் வேண்டும். ஆதீனத் திருமடங்களும் மற்றும் அறநிலையங்களும் அரசுக்கு இம்முடிவினை மறுபரிசிலனைசெய்ய வேண்டித் தாக்கீது செய்துகொண்டிருப்பதாகத் தெரிகிறது. தமிழக அரசும், அதன் முதல்வரும் இந்நிலைமைகளைச் சீர்தூக்கி, ஆராய்ந்து, அறநிலைய வளர்ச்சிக்குத் தடையான இம்மசோதாவைத் திரும்பப் பெற்றுக் கொண்டு உண்மையான பண்பாட்டு வளர்ச்சிக்கு வழிகோல வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகின்றோம். போராடாது சான்றாண்மையுடன் தங்களது நிலைமையினை எடுத்துரைக்கும் அறநிலையங்களின் பண்புணர்ந்து அவற்றைப் போற்றும் பொறுப்பு அரசுக்கு உண்டு.

வேரில் நீர்பாய்ச்சாது, வெற்றிடத்தில்பாய்ச்சினால் மரம் வளர்ச்சி அடைவதில்லை ; மின்சாரம் தோன்றுமிடத்தில் முயலாமல், வீட்டில் விளக்கெரியவில்லை என வருந்துவது அறிவுடைமையாகாது. உலக மற்றும் சமுதாயத்தின் உண்மையான வளர்ச்சிக்கு உரிய அடிப்படையான காரணங்கள் - வேர்க்கால்கள் - நுட்பமானவை. தெய்வ அருளையும் அவற்றைவிளக்கும் அறநிலையங்களையும்போற்றாது, சமுதாயப் பயனை எதிர்பார்த்தல் பொருத்தமற்றதாகும். தமிழக அரசின் முதல்வர் துணிச்சலாகச் செயல்பட்டு, எதிலும் புரட்சியைச் செய்யும் தன்மையுடையவர். எனவே, அறநிலைய வளர்ச்சியில் ஏற்பட்டிருக்கும் நீண்ட காலத் தடைகளையும் துணிச்சலாக அகற்றிச் சமயத்துறையிலும் புரட்சிகரமாகச் செயல்படுவார் என்று எதிர்பார்க்கிறோம்.

**" முன்னவ னார்கோயில் பூசைகள் முட்டிடின்**
**மன்னவர்க்குத் தீங்குள வாரி வளங்குன்றும்**
**கன்னங் களவு மிகுத்திடும் காசினி**
**என்னரும் நந்தி எடுத்துரைத் தானே "**

**— திருமந்திரம்.**

உ

குருபாதம்

திருக்கயிலாய பரம்பரைத் தருமையாதீனம்

26 ஆவது குருமகாசந்நிதானம்

# ஸ்ரீலஸ்ரீ சண்முக தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள்

வழங்கியருளிய

# *ஆசியுரை

சித்திநெறி கேட்டல் செகமயக்கம்; சன்மமற
முத்திநெறி கேட்டல் முறைகாண்; பராபரமே.

— தாயுமானவர்.

**தாயுமானவர் நெறிமரபு :**

சோழநாட்டுத் திருத்தலங்களுள் திருச்சிராப்பள்ளி சிறப்புடைய தொன்று. அத்தலத்துக் குன்றுடையபெருமானை "நன்றுடையான்" என்றும், "தீயதில்லான்" என்றும் கூறி உள்ளங்குளிர்ந்தார் திருஞானசம்பந்தர். அத்திருமலைதந்த ஒரு தவச்செல்வர் தாயுமான அடிகள். இவரது காலம் இற்றைக்கு ஏறக்குறைய முந்நூறு ஆண்டு கட்கு முற்பட்டது.

தமிழ் அறிந்தவரில் தாயுமானவரை அறியாதார் ஒருவரும் இரார். அடிகளது பாடல், பக்தியும் ஞானமும் நிரம்பி வழிவன. பக்தி, ஞானம் என்ற இருதுறையிலும் நிற்போர் அடிகளது பாடலை உணர்ச்சி பெருக ஓதி, உள்ளம் உருகி நிற்பர்.

அடிகள்பாடலைச் சிலர், 'பக்தி வெள்ளம்' எனப் பாராட்டி மகிழ்வர். சிலர் 'வேதாந்தம்' எனப் புகழ்வர். சிலர் 'சித்தாந்தம்' எனப் போற்றிப் பயன்கொள்வர். சிலர் 'வேதாந்த சித்தாந்த சமரச நெறி' எனக் கொண்டாடுவர். எனவே, தாயுமானவர்து நெறி மரபு பற்றிச் சிறிது நோக்குதல் இன்றியமையாதது ஆகும்.

---

* அகில இந்திய வானொலியில் திருச்சி நிலையத்திலிருந்து 'நெறி விளக்கம்' என்ற தலைப்பில் தாயுமானவர் நெறிபற்றி 6—2—1978 அன்று வழங்கியதைத்தழுவியது. வானொலி நிலையத்தாரின் அனுமதியுடன் வெளியிடப்பெறுகிறது.

**மூலன்மரபில்வருமௌனகுரு :**

திருச்சிராப்பள்ளி மலைக்கோயிலுக்கு ஏறிப்போகும் வழியில் நமது ஆதீன மௌனமடம் இருப்பதை யாவரும் அறிவர். அதைத் தாபித்தவர் திருமூலர்மரபில்வந்த 'சாரமா முனிவர்' என்பவர் ஆவர். அந்த மடாலயத்தில் பதினேழாவது பட்டமாக எழுந்தருளியிருந்தவர் 'மௌனகுரு' என்பவர். அவரது பெயராலேயே இன்று அந்த மடம் வழங்கப்பெறுகிறது. அவரே தாயுமானவர்க்கு ஞானோபதேசம் செய்த ஞானகுரு ஆவர்.

தாயுமானவர் பாடியருளிய பல பாடல்களில் 'மௌனகுரு வணக்கம்' என்பது ஒன்று. அதில் அடிகள் அந்த அருட்குரவரது பெருமைகள் பலவற்றையும் கூறி, ஒவ்வொரு பாட்டிலும் "மூலன் மரபில்வரு மௌன குருவே" என்று தம் ஞானசாரியரை அழைக்கின்றார். எனவே, அவரது மரபு திருமூலர் மரபே எனத் தெளிவாக விளங்குகின்றது.

**சைவசித்தாந்தமரபு :**

திருமூலர் தமது திருமந்திர நூற்பாயிரத்தில் தமக்கு மாணாக்கர் எழுவர் இருந்ததாகக் கூறியுள்ளார். ஆகவே அந்த எழுவருள் ஒருவர்மரபில் வந்தவர் சாரமா முனிவர் என்பது நன்கு விளங்கும்.

'திருமூலர் அறுபத்துமூன்று நாயன்மார்களில் ஒருவர்' என்பதும், 'அவர் சைவாகமங்களைத் தமிழில் திருமந்திர மாலையாக அருளிச்செய்தார்' என்பதும் உலகம் அறிந்த உண்மைகள். எனவே திருமூலர் வழிவந்த அருள் மரபு சைவாகம மரபு அல்லது சைவ சித்தாந்த மரபு என்பது சொல்லவேண்டுவதில்லை. அதனால் சாரமா முனிவர் முதலாக மௌனகுரு வரையில் வந்த அருள்மரபு சித்தாந்த மரபு ஆதலால், மௌனகுருவிடம் உபதேசம் பெற்ற தாயுமானவர் மரபும் சித்தாந்த மரபு என்றே ஆகின்றது. தாயுமானவர் 'சின்மயானந்தகுரு' என்னும் தலைப்பில் உள்ள பதினொரு திருப்பாடலிலும் தட்சிணாமூர்த்தியை, 'சித்தாந்த முத்தி முதலே' என்று அழைத்துள்ளார்.

சைவாகமங்களின் சாரமாகிய சைவ சித்தாந்தத்தைக் கூறும் நூல்கள் சிவஞானபோதம், சிவஞானசித்தியார் முதலாகப் பதினான்கு உள்ளன. அவைகளில் மிகவும் பெரிதாய் விரிந்திருப்பது சிவஞான சித்தியார். மௌனகுரு தாயுமானவருக்குத் தாம் உபதேசித்த ஞானத்தைச் சிவஞானசித்தி நூலைக்கொண்டே ஐயம் திரிபற விளக்கி

யருளினர் என்பது, அந்த மௌனகுரு வணக்கத்தில் தாயுமானவர் தமது குருவை,

" வீறு சிவஞான சித்தி நெறி
மௌனுேப தேச குருவே "

எனக் கூறியிருத்தலால் நன்கு விளங்கும்.

சிவஞான சித்தியாரின் பெருமையை,

" பார்விரித்த நூலெல்லாம் பார்த்தறியிற் சித்தியிலே
ஓர்விருத்தப் பாதிபோ தும் "

என அருளிச்செய்தவர் நம் குருஞானசம்பந்தர். அதைத்தாயுமானவர்,

" பாதி விருத்தத்தால் இப் பார்விருத்தமாக உண்மை
சாதித்தார் பொன்னடியைத் தான் பணிவதெந்நாளோ "

எனத் தமது குருமரபு வணக்கத்தில் கூறியுள்ளார் எனில் அவரது நெறி மரபு இன்னது என்பது எளிதில் விளங்குவதாம்.

சிவஞான சித்தி நெறி, ஒப்புயர்வற்ற சித்தாந்த ஞான நெறி என்பது வெள்ளிடைமலை. எனவே, தாயுமானவரது அருள் மரபு திருமூலர் வழிவந்த மௌனகுரு மரபாகிய சித்தாந்த ஞானமரபு என்பது தெளிவு.

**நன்னெறிக்கருவூலம் :**

உண்மை இது ஆகையால் தாயுமானவர் ' வேதாந்த சித்தாந்த சமரச நன்னிலை ' எனக் கூறுவது, ' வேதாந்தத் தெளிவாம் ' சைவ சித்தாந்தம்எனச் சிவப்பிரகாச நூலுள் உமாபதி சிவாசாரியார் கூறியுள்ள கருத்தையே கொண்டதாகும்.

சித்தாந்தம், " இது ஆகும்; இது அல்லது எனும் பிணக்கு இன்றியிருப்பது " எனச் சிவஞானசித்தி கூறுகின்றபடி சித்தாந்த சைவம் எச்சமயத்தையும் வெறுப்பதில்லை. அனைத்துச் சமயங்களிலும் உள்ள உண்மைகளை அது தழுவியேசெல்வதாகும். எனவே, அதனை " வேதாந்த சித்தாந்த சமரச நன்னிலை " எனத் தாயுமான அடிகள் கூறியதில்வியப்பில்லை. ஆகவே, தாயுமானவரது அருள்மரபு, திருமூலர் வழிவந்த சித்தாந்த சைவச் செந்நெறி மரபு என்பது தெளிவான ஒன்ருகும்.

இச்செந்நெறி மரபு அனைத்து நலங்களையும் கொண்ட ஒரு நன்னெறிக் கருவூலம் என்பதை அடிகளே தமது மௌனகுரு வணக்கப் பாடல் ஒன்றால் விளக்குகின்றார்.

" போனகம் இருக்கின்ற சாலையிடை வேண்டுவ
புசித்தற் கிருக்கும் அதுபோல்
புருடர் பெரு தருமாதி வேதமுடன் ஆகமம்
புகலும் அதில் நாலாம் பயன்
ஞானநெறி முக்ய நெறி காட்சி அனுமான முதல்
நானு விதங்கள் தேர்ந்து
நான் நான் எனக் குழறு படை புடை பெயர்த்திடவும்
நான்கு சாதனமும் ஓர்ந்திட்டு
ஆன நெறியாம் சரியை யாதி சோபானமுற்று
அணுபட்ச சம்பு பட்சம்
ஆம் இரு விகற்பமும் மாயாதி சேவையும்
அறிந்து இரண்டு ஒன்று என்னும் ஓர்
மானத விகற்பம் அற என்றும் நிற்பது நமது
மரபென்ற பரமகுருவே
மந்த்ர குருவே யோக தந்த்ர குருவே மூலன்
மரபில் வரு மௌன குருவே ".

## அட்டைப்பட விளக்கம் :

இறைவன் சோதிவடிவாய்த் தோன்றி காட்சியளித்த காலம் மகாசிவராத்திரியாகும். அதனால் சோதிலிங்கத் திருத்தலங்களில் சிவராத்திரி சிறப்பாகக் கொண்டாடப்படுகிறது. சோமநாதம், ஸ்ரீசைலம், உஜ்ஜைனி, ஓங்காரம், வைத்தியநாதம், பீமசங்கரம், இராமேசுவரம், நாகேசம், வாரணசி (காசி), திரியம்பகம், கேதாரம், குஸ்மேசம் என்பன பன்னிரு ஜோதிர்லிங்கத் தலங்களாகும்.

இராமபிரான் வழிபட்டு அருள்பெற்ற திருத்தலம் இராமேசுவரம். மூர்த்தி, தலம், தீர்த்தம் என்ற மூன்றாலும் சிறப்புற்ற தலங்களை வழிபட விரும்புவோர் வடக்கில் ஸ்ரீகாசி (வாரணசி) யையும், தெற்கில் இராமேசுவரத்தையும் முக்கியமான வழிபாட்டுத் தலங்களாகக் கொள்வர். இவ்வாண்டு 7—3—1978 செவ்வாய்க்கிழமையன்று நிகழும் மகாசிவராத்திரியைமுன்னிட்டு இராமபிரான் இராமநாதரைப் பூஜை செய்யும் காட்சி அட்டையை அழகுசெய்கிறது.

# கடவுட் கொள்கை

தொகுத்தவர் :

திரு. அ. கல்யாணசுந்தர தேசிகர்

விவேகானந்தரைப்பற்றி அறியாதவர்கள் உலகில் எங்கும் இருப்பதற்கில்லை. அவரது இளமைக் காலத்தில் அவரும் கடவுளைக் கண்ணாரக் கண்டாலல்லது தாம் கடவுள் உண்டு என்று நம்புவதற்கில்லை என்றே எண்ணினர்; சொல்லியும் வந்தார். ஆனால் அவர் இராமகிருஷ்ணருக்குச் சீடராக ஆனபிறகு உண்மையைத் தெளிந்து உணர்ந்து அடியிற்கண்டவாறு உரைத்திருக்கின்றார்.

"Before flooding with socialistic and political ideas first deluge the land with spiritual deluge"

* * * *

மேலும் ஃப்ரஞ்சு அறிஞர் ரூஸோ என்பவர் "மனித இனம் அமைதியோடு வாழவேண்டுமானல் கடவுள் என்ற ஒன்று இல்லை யானலும் ஒன்றை உருவாக்கிக்கொள்" என்று அடியிற்கண்டபடி சொல்லியிருக்கிறார்.

"Even if there is no God, we must invent one for the peace of land"

* * * *

ரஷ்யத் தலைவனை ஸ்டாலின் நோய்வாய்ப்பட்டுத் துன்புற்றிருந்த தனது கடைசிக் காலத்தில் "O God if there is any God save my soul if there is any soul" என்று கடவுளை நோக்கிப் பிரார்த்தித்திருக்கிறன். இளமை முறுக்கிலிருந்த காலத்தில் கடவுள் உண்டு என்பதில் நம்பிக்கை இழந்திருந்தாலும் வயது முதிர்ந்து அனுபவ அறிவும் முதிர்வுற்ற பிறகு மனித இனம் கடவுள் என்ற ஒருவர் இருக்கிறர் என்பதை உணர்ந்தே ஆகும்.

மற்றொரு ப்ரஞ்சு அறிஞர் லாஃபாண்டேன் என்பவர் விஞ்ஞானமும் மதமும் ஒவ்வொரு பண்பாட்டின் இயல்புகளாகும் என்று அடியிற்கண்டபடி சொல்லியிருக்கிறார்.

"Science and religion are aspects of every culture."

• • • •

வங்காளப் பேரறிஞர் சரத் சந்திரர் "ஆலயம் என்ற ஒன்று இருந்தால்தான் மன அமைதி என்ற ஒன்று உண்டாகும்" என்று வலியுறுத்தியிருக்கிறார்.

" Spirit becomes unclean if the Heart is not washed away with prayer.

—MAHATMA GANDHI.

• • • •

‡ "கடந்த முப்பது ஆண்டுகளாக, உலக நாகரிக நாடுகள் அனைத்திலும் உள்ள மக்கள் பலரும், என்பாற் கலந்து ஆய்வுரை கேட்டுள்ளனர் என்னுடைய பிணியாளர்கள் அனைவருள்ளும், வாழ்க்கையில் இரண்டாம் பகுதியில் — அதாவது, முப்பத்தைந்து வயதுக்குமேல் — தமது இன்னல்கள் தீருவதற்கு உரிய கடைசி வழியாகத் தமது வாழ்க்கையிற் சமய உணர்வு கைவரப் பெறுதலைக் கொள்ளாதவர்கள் ஒருவராவது இல்லை. அவர்களில் ஒவ்வொருவரும் நோயுற்றதற்குக் காரணம், உயிர்ப்புடைய ஒவ்வொரு சமயமும், அவ்வக் காலத்தில் தன்னைப் பின்பற்றும் மக்களுக்குத் தருகின்ற மன நிறைவு ஆகிய உணர்ச்சியை, அவர்கள் பெறாமல் இழந்து விட்டமையே ஆகும். மீண்டும் சமய உணர்வு கைவரப் பெறாமல் அவர்களில் ஒருவராவது உண்மையில் தம்முடைய பிணி தீரப் பெற்றிலர்"

" During the past thirty years people from all the civilized countries of the world have counsulted me .....

Among all my patients in the second half of life - that is to say, over thirty-five years - there has not been one, whose problem in the last resort was not that of finding a religious outlook on life.

It is safe to say that every one of them fell ill; because he had lost that which the living religions of every age have given to their followers and none of them has been really healed who did not regain his religious outlook.

Prof CARL GUSTAV JUNG.

‡ " Faith is one of the forces by which men live and the total absence of it means collapse "

—Prof. WILLIAM JAMES.

† "யார் உண்மையிற் சமயவுணர்வோடு இருக்கின்றர்களோ, அவர்களுக்கு நரம்புத் தளர்ச்சி ஏற்படுவதில்லை" என டாக்டர். ஏ. ஏ. பிரில் என்பவர் கூறுகின்றர். "மனிதர்களை வாழ்விக்கும் ஆற்றல்களுள் கடவுள் நம்பிக்கை என்பதும் ஒன்று. அது முழுவதும் இல்லாமல் போகுமாயின், வீழ்ச்சியையே குறிக்கும்" ‡ என வில்லியம் ஜேம்ஸ் என்பவர் விளக்குகின்றர். "கடவுள் வழிபாடு செய்யாமல் இருப்பின், நான் எப்போதோ பைத்தியக்காரன் ஆகி விட்டிருப்பேன்" * எனக் காந்தியடிகள் உரைத்திருத்தலை நாம் உணர்வோம்.

இறையுணர்வு இன்றியமையாதது:

$ "நம் காலநிலைக்கு வேண்டுவன சில இருக்கின்றன. விலக்கப்படவேண்டுவன சில உள்ளன. நம் காலநிலையில் அருளுணர்வும், 'மனித இனம் இன்பமாக வாழவேண்டும்' என்னும் விருப்பமும் தேவைப்படுகின்றன. எல்லாவற்றிலும் மேலாகத் திடமான நம்பிக்கையும், புதியன படைத்தலில் துடிப்பும், இக்காலத்திற்கு இன்றியமையாதனவாகும்.

---

(†) "Any one who is truly religious does not develop a neurosis."

—Dr. A. A. BRILL.

(‡) "Faith is one of the forces by which men live and the total absence of it means collapse."

— Prof. WILLIAM JAMES

(*) "Without prayer, I should have been a lunatic long age."

— GANDHIJI.

($) ' There are certain things that our age needs, and certain things it should avoid It needs campassions, and a wish that man kind should be happy: it needs above all. courageous hope and the impulse of creativeness.

The root of the matter is a very simple and old-fashioned thing so simple that I am almost ashamed to mention for fear of the derisive smile with which wise cynics will greet my words.

நான் கூற முற்படும் செய்தியின் அடிப்படை அல்லது வேர் யாதெனின், மிக எளிமையானதும், மிகப் பழமை முறையில் அமைந்ததுமான ஒன்றேயாகும். நான் கூறத்தலைப்படுவது மிக மிக எளிமையும், பழமை முறை வாய்ந்ததாக இருத்தலும் பற்றி, ஒரு சிலர் என்பாற் புன்முறுவல் பூத்து ஏளனம் செய்யக்கூடுமே என்றஞ்சி, அதனைக் குறிப்பிடுவதற்குக்கூடத் தயங்கி, நான் பெரிதும் நாணம் கொள்ளுகின்றேன்.

நான் கருதும் பொருள் - அதனைக் குறிப்பிடுவதற்காக, அருள் கூர்ந்த என்னை மன்னித்துவிடுங்கள். அன்பு 'கிறித்தவ அன்பு அதாவது இறையுணர்வோடு கூடிய இரக்கவுள்ளம் ஆகும்,

இவ்வுணர்வை நீங்கள் பெறுவீர்களாயின், உங்கள் வாழ்க்கைக்கு ஓர் உயரிய நோக்கமும், செயல்களுக்கு ஒரு வழிகாட்டியும், மன வுறுதிக்கு ஒருகாரணமும், அறிவின்நேர்மைக்கு ஓர் இன்றியமையாத தேவையும் பெற்றவர்கள் ஆவீர்கள்.

---

The thing I mean-please forgive me for mentioning it' is love, Christian love or compassion.

If you feel this, you have a motive for existence a guide in action, a reason for courage an imperative necessity for intellectual honesty.

— Dr. BERTRAND RUSSEL.

---

உ

சிவமயம்

# சிவதரிசன பலன்

காலைதொழ அற்றைவினை கட்டகலும்; கட்டுச்சி

வேலைதொழ இப்பிறப்பில் வெந்துயர் போம்—மாலையினில்

வந்து சிவன்தாளை வந்தித்தால் ஏழ்பிறப்பின்

வெந்துயரம் எல்லாம் விடும்.

---

# சிவபோகசாரம்

**வி. சா. கு.**

திருக்கயிலாய பரம்பரைத் தருமையாதீனத்தை நிறுவியருளிய ஸ்ரீ குருஞானசம்பந்தர் சிவானுபூதி நிலையில் திளைத்து நின்று அவ்வப்போது அருளிச்செய்த வெண்பாக்கள் சிவபோகசாரம் என்னும் அருள் நூலாய் விளங்குகிறது. சிவபோகமாகிய சிறந்த பயனைத் தருதல் பற்றி இந்நூல் இப்பெயர் பெற்றுள்ளது. அனுபூதிமாலை என்றும் இந்நூல் வழங்கப்படும். பன்னெடுங்காலமாகத் தமிழ்மக்கள் பதினெண் சித்தர் பாடல்களோடு இந்நூலையும் இணைத்துப் பயின்று பயன்பெற்று வருகின்றனர். செய்யுள் வடிவாக விளங்கும் இந்நூலை உரைநடை வடிவில் காண்போம்.

**குருவணக்கம்:*** அழகிய திருவாரூரில் வாழ்பவரும், எல்லாரிலும் மேம்பட்ட தலைவராயிருப்பவரும் நமக்குக் குருநாதராக விளங்குபவருமாகிய ஸ்ரீ ஞானப்பிரகாசர் என்னும் அருளாசிரியர், சித்தியும் பத்தியும், உண்மை, ஞானமும், முத்தியும் ஆகியபயன்களையெல்லாம் அருளவல்ல முதல்வராவார். அருவம் உருவம் அருவுருவம் ஆகிய மூன்று வகையின் கண்ணும் அடங்காதவனும், தன்னை யொப்பாரின்மையின் தானேயாய முதல்வனும் ஆகிய இறைவன் முன்பு என் உயிர்க்குயிராய் உள்நின்றுணர்த்தியருளினான். இதுபோது திருவாரூரின்கண் ஞானப்பிரகாசன் என்னும் ஆசான் மூர்த்தியாக எழுந்தருளி வந்து ஞான வடிவமான திருவடிகளை எனக்கு நிழலாகத்தந்து ஆட்கொண்டருளினான்.

உலகமக்கள் அனைவர்க்கும் தலைவராய்த் திருவாரூரின்கண் எழுந்தருளிவந்து அருள் செய்திலராயின் அறநெறியாகிய உலகியல் ஒழுக்கங்களையும்சிவதர்மம்,சிவயோகம், சிவஞானம்எனப்படும் மெய்ந்நெறியொழுக்கங்களையும் அந்நெறிகளின் பயனாய் விளங்கும் சித்தி முத்தி என்னும் பேறுகளையும் நாம் எங்ஙனம் உணரமுடியும்?

முற்காலத்தில் பிரமவிட்டுணுக்களால் அடிமுடி அறிய முடியாதபடி உயர்ந்துநின்ற பெருமானே இன்று இந்நிலவுலகில் வந்து பிறந்து

---

* ஸ்ரீ குருஞானசம்பந்தர் தம்மை ஆட்கொண்டருளிய குருநாதராகிய கமலை ஸ்ரீ ஞானப்பிரகாசர் மீது பாடியவை (பாடல்கள் 1—10).

ஞானப்பிரகாசன் திருப்பெயர்பூண்டு திருவாரூரின்கண் இருக்கின்றான். இருந்து ஞானானுபூதியை நமக்குத் தருகின்றான்.

ஒலிக்கும் வண்டுகளுக்குத் தேனைச் சொரியும் சோலைகள் சூழ்ந்த திருவாரூரில் தம்மைநாடிவருவோர்க்கு ஞானத்தைநல்கும் நல்லாசிரியனாக எழுந்தருளி விளங்கும் ஞானப்பிரகாசர் என்னும் அருட்குரவரை நான் கண்டேன். கண்ட அளவிலேயே பாசங்கள் அகலப்பெற்றேன். திருவருளாகிய அமுதத்தை முகந்து பருகினேன். அதனால் பேரின்பத்தில் மூழ்கினேன்.

நம்மை ஆண்டு அருள்புரியும் ஞானப்பிரகாச குரவர், நாம் உயிர்க்கு உயிராய் உள் நின்று உணர்த்தி வரவும், அங்ஙனம் உணர்த்துமாற்றை இவர்கள் அறிந்திலர். ஆதலால் இன்று அகத்தேயன்றிப் புறத்தும் வெளிநின்று உணர்த்துவோம் எனக் கருதி நம்மனோருள் ஒருவர் போல மனித உருக்கொண்டு திருவாரூரின்கண் வந்தவராவார்.

திருவாரூரின்கண் எழுந்தருளி யிருப்பவரும் வேத சிவாகமங்களை ஐயந்திரிபற உணர்த்தியருளியவருமாகிய ஞானப்பிரகாச தேசிகர், ஒளித் தோற்றத்தினைத் தந்து இருள் தோற்றத்தைப் போக்கும் ஞாயிற்றைப் போல என்னுள்ளத்தின்கண் அருள் தோற்றத்தைக் குறைவறக் கொடுத்து மருள் தோற்றத்தைத் துடைத்தருளிய ஞான சூரியன் ஆவார்.

அறியாமையும், பூரணமும் உடையவரே! செந்தாமரை மலர் போலும் அழகிய திருவடிகளை உடையவரே! திருவாரூரின்கண் எழுந்தருளிய வேத முதல்வரே! அடியேன் நீங்காத பேரின்பத்துள் அடங்கி உலகின்கண் மீளவாராது அவ்வின்பமேயாய் விடும்படி அருள்புரிவீராக.

திருவாரூரின்கண் பிறை சூடிய பெருமான் எனவே அளத்தற்கரிய பெருமையோடு விளங்கும் ஞானப்பிரகாசர் என்னும் அருட்குரவர் இவ்வுலகில் ஈட்டப்படும் செல்வமும் யாக்கையும், அவற்றைப் பொருள் என்றறியும் புல்லறிவும் அவற்றின்கண் பற்றுச் செய்யும் ஆசையும் பொய் எனவும் திருவருள் ஒன்றுமே மெய் எனவும் காட்டி அவற்றினின்றும் எம்மை நீக்கித் திருவருளிற் சேர்ப்பித்தார். ஆசிரியனின் அருட்பார்வையால் எல்லாம் பரமாய்த் தோன்றுதலால் பொறிகளின் வாயிலாகக் காண்டல் கேட்டல் பூணுதல் தரித்தல் முதலிய இன்ப நுகர்ச்சிகள் அனைத்தும் பொய்யாகத் தோன்றின. என்னுள் திருஞான சம்பந்தன் வீற்றிருப்பது ஒன்றுமே உண்மையாய்த் தோன்றிற்று.

( தொடரும் )

உ

சிவமயம்

தருமையாதீனம்

# வேளூர் ஸ்ரீ வைத்தியநாதசுவாமி தேவஸ்தானம்,

வைத்தீசுவரன்கோயில், சீகாழி வட்டம். தஞ்சை மாவட்டம்.

# திருவிளக்கு அறக்கட்டளை நிதி

காணிக்கை செலுத்தியவர்களின் பெயர் விபரமும்
மாயூரம் இந்தியன் வங்கியில் உள்ள முதலீடுகள் விபரமும்.

( மலர் 36, இதழ் 2, பக்கம் 96 இன் தொடர்ச்சி )

| | | | |
|---|---|---|---|
| 145 | திரு. S. ராஜாராமன், புதுடெல்லி | ரூ. | 1000 |
| 146 | திரு. சுபேதகுமார், காட்டுமன்னார்குடி | ரூ. | 1000 |
| 147 | திரு. K. ஜெயராமன், சென்னை | ரூ. | 1000 |
| 148 | திரு. மாணிக்கம், சேலம் - 7 | ரூ. | 1000 |
| 149 | பட்டுப்புடவை விற்றுமுதல் நிதி | ரூ. | 1000 |
| 150 | திரு. S. G. சிவசிதம்பரம், சென்னை - 28 | ரூ. | 1000 |
| 151 | திரு. M. N. ராஜாராமன் ராயப்பேட்டை | ரூ. | 1000 |
| 152 | உண்டியல் நிதி | ரூ. | 1000 |
| 153 | ஷை | ரூ. | 1000 |
| 154 | ஷை | ரூ. | 1000 |
| 155 | ஷை | ரூ. | 1000 |
| 156 | ஷை | ரூ. | 1000 |
| 157 | திரு. R. ரமேஷ் S. D. ரெட்டியார்&சன்ஸ்கொச்சி-11 | ரூ. | 1001 |
| 158 | திருமதி காந்திமதி இராதாகிருஷ்ணன், நெய்வேலி | ரூ. | 1001 |
| 159 | திரு. D. R. ரெங்கநாதன், பெக்கஞ்சேரி | ரூ. | 1000 |
| 160 | திரு. P. கோபால்சாமிபிள்ளை, சீகாழி | ரூ. | 1001 |
| 161 | திரு. K. R. சோமசுந்தரம், திண்டுக்கல் | ரூ. | 1000 |
| 162 | திரு. R. பாலகிருஷ்ண நாயுடு, | ரூ. | 1000 |
| 163 | பட்டுப்புடவை விற்றுமுதல் நிதி | ரூ. | 1000 |

# திருஈங்கோய்மலைத் தலச் சிறப்புக்கள்

தருமையாதீனத் தமிழ்ப்புலவர்,

வித்துவான். திரு. வி. சா. குருசாமிதேசிகர் எம் ஏ.,

சோழவள நாட்டில் காவிரியாற்றின் வடகரையில் உள்ள பாடல் பெற்ற சிவதலங்கள் 63. அவற்றுள் ஈங்கோய்மலை 63வது தலமாக விளங்குவது. திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில் முசிரிக்கு மேற்கே சேலம் செல்லும் நடுவழியில் அகண்ட காவிரியின் கரையில் இத் தலம் உள்ளது. திருச்சிராப்பள்ளியிலிருந்து நாமக்கல் சேலம் செல்லும் பேருந்துகளில் சென்றால் இத்தலத்தை அடையலாம். பேருந்து நிற்குமிடத்திலிருந்து 800 அடி தூரத்தில் மலையின் அடிவாரம் உள்ளது.

## தலப் பெருமை :

இத்தலத்து மலை 3 கி. மீட்டர் சுற்றளவும் 900 அடி உயரமும் உடையது; சிவசக்தி அமைப்பில் இரட்டை மலையாக இனிய காட்சியோடு திகழ்கிறது. ஆதிசேடனுக்கும் வாயுதேவனுக்கும் ஏற்பட்ட போட்டியில் வாயுதேவன் கயிலாய மலைச் சிகரங்களில் ஒன்றினை இத்தலத்தில் இட்டனன் என்று கூறப்படுகிறது. அதனால் தென் கயிலாயம் என்ற பெயரைப் பெற்றுள்ளது. பச்சைநிறக் கல்லாலாகிய மலை ஆதலின் மலையின் பெயர் மரகதாசலம் எனவும் அதில் எழுந்தருளி விளங்கும் இறைவர் பெயர் மரகதாசலேசுவரர் எனவும் வழங்கப்படுகின்றன. அகத்தியர் ஈ வடிவத்தோடு பூசித்ததால் ஈங்கோய்மலை எனவும் உமையம்மையார் பிருங்கிமுனிவர் பொருட்டுத் தவம் செய்து இறைவரது இடப்பாகத்தைப் பெற்ற தலமாதலின் சிவசக்தி மலை எனவும் வழங்கப் பெறுகிறது.

உமையம்மையார், திருமால், பிரமன், இந்திரன், இயமன் நவசித்தர்கள், அகத்தியர், சுப்பிரப அரசன் முதலியோர் வழிபட்ட சிறப்புடையது.

திருஞானசம்பந்தர் அருளிய தேவாரத் திருப்பதிகம் ஒன்றையும் நக்கிரதேவரின் ஈங்கோய்மலை எழுபது என்ற நூலையும் பெற்றது.

## மூன்று தொடர்புடைய தலங்கள்

திருவாட்போக்கி, திருக்கடம்பந்துறை திருஈங்கோய்மலை ஆகிய மூன்று தலங்களும் ஒரே வரிசையில் தெற்கு வடக்கில் உள்ளன. இவற்றைச் சோமாஸ்கந்தத் தலங்கள் என்பர். வாட்போக்கி - சிவம். கடம்பந்துறை - முருகன். ஈங்கோய்மலை- சக்தி; இத்தலங்களை ஒரே நாளில் வழிபடுதல் புண்ணியம் என்று கூறுவர். ' காலைக் கடம்பர், மத்தியானச் சொக்கர், அந்தித் திருஈங்கோய்மலைநாதர் ' என்று பழமொழி வழங்கும். காலை வழிபாடு கடம்பந்துறையிலும், உச்சிக்கால வழிபாடு வாட்போக்கியிலும், மாலை வழிபாடு ஈங்கோய் மலையிலும் நிகழ்த்துதல் வேண்டும் என்று அறிகிறோம்.

இம்மூன்று தலங்களில் குளித்தலைக்கு அருகில் உள்ள கடம்பந் துறையும் ஐயர்மலையென வழங்கும் வாட்போக்கியும் மிக அருகில் உள்ளன. ஈங்கோய்மலையிலிருந்து கடம்பந்துறைக்குச் செல்வோர் மணத்திட்டை என்ற ஊரினருகில் உள்ள அகண்ட காவிரியைக் கடந்து செல்லவேண்டும். காவிரியைக் கடக்கப் பரிசில் உள்ளது. கோடைக் காலத்தில் ஆற்றில் இறங்கிச் செல்லலாம். அல்லது திருச்சிராப்பள்ளி சென்று அங்கிருந்து சேலம் செல்லும் பேருந்தின் மூலமாகவும் இத்தலத்தை அடையலாம். ஈங்கோய் மலையில் அகண்ட காவிரிக்குப் பாலம் கட்டி வருகின்றனர். அப்பாலம் பூர்த்தி அடைந்தால் இம்மூன்று தலங்களையும் தரிசித்தல் மிக எளிதாகும்.

### கோயிலமைப்பு :

பேருந்துச் சாலையில் இறங்கி வடக்கே சிறிது தூரம் வந்த வுடன் மலையடிவாரத்தை அடையலாம். கோயிலை அடைய மலையின் தென் பகுதியில் நல்ல படிகளோடு கூடிய வழி உள்ளது. மலையின் உயரம் 300 முழம். சுற்றளவு 2 மைல். மலையடிவாரத்தில் படியினை அடுத்துப் பால்போகர் கோயில் என்ற ஒரு கோயில் கிழக்கு நோக்கி உள்ளது. அதன் எதிரே பெரிய கற்கம்பம் ஒன்று நிற்கிறது. இக்கம் பத்தடியில் கருப்பு தேவதை உள்ளது. மலையுச்சியை அடைவதற்கு 500 படிகள் உள்ளன. முதல் மதில் வாயிலைக் கடந்தவுடன் திருமுன்றிலும் மடைப்பள்ளியும் குடிதண்ணீர்க் குழாயும் உள்ளன. அதையடுத்துத் தெற்குநோக்கிஇராஜகோபுரம் விளங்குகிறது. கோபுர வாயிலைக் கடந்து உள்ளே சென்றால் பிராகாரத்தின் மேல்பால் உள்ள விநாயகர் முருகன் சந்நிதிகளைத் தரிசித்துக்கொண்டே வலமாகச் சுவாமி சந்நிதியை அடையலாம்.

சுவாமிஅம்பாள் சந்நிதிகள் இரண்டும் கிழக்கு நோக்கியன. அம்பாள் சுவாமியின் இடப்புறம் எழுந்தருளியுள்ளார். மரகதாசலநாதர் எழுந்தருளி விளங்கும் கர்ப்பக் கிருகத்திற்கு முன்னல் அர்த்த மண்டபம் ஸ்நபனமண்டபம் மகாமண்டபம் ஆகியன உள்ளன. மகாமண்டபத்தின் வாயிலில் துவாரபாலகர் திருவுருவங்கள் உள்ளன. வலப்பால் வல்லபை விநாயகரும் இடப்பால் தண்டபாணியும் எழுந்தருளியுள்ளனர். சந்நிதியில் நந்திதேவர், பலிபீடம், கொடிமரம் ஆகியன உள்ளன. கொடிமரத்திற்கு அருகில் நவக்கிரகங்கள், பைரவர், சூரியன், நால்வர் திருவுருவங்கள் இருக்கின்றன.

அர்த்த மண்டபத்தில் அர்த்தநாரீசுவரர் எழுந்தருளியுள்ளார். சுவாமி சந்நிதியில் நிற்கும்போது நம்மனம் ஒருமைப் படுவதை நன்குணரலாம். சுவாமியின் திருவுருவம் மரகத வடிவாலமைந்து கற்பூர தீபாராதனையில் சுடர்விட்டு ஒளிர்வதைக் காணலாம். இச்சிவலிங்கமூர்த்தியின் சிறப்பை மணிவாசகர் "ஈங்கோய் மலையில் எழிலது காட்டியும்" என்று அருளிச் செய்கின்ருர்.

" வினையா யினதீர்த் தருளே புரியும்விகிர்தன் விரிகொன்றை
நனையார் முடிமேல் மதியம் சூடும் நம்பர் நலம் மல்கு
தனையார் கமல மலர்மேல் உறைவான் தலையோடனலேந்தும்
எனையாள் உடையாள் உமையா ளோடும் ஈங்கோய்மலையாரே "

என்ற தேவாரப் பாடலை ஓதி வழிபட்டு வலமாகத் தெற்கே தெக்ஷிணமூர்த்தியைத் தரிசித்துக்கொண்டு அம்பாள் சந்நிதியை அடையலாம். அம்பாள் கோயில் கர்ப்பக்கிருகம் மகாமண்டபம் இவற்ருேடு காட்சி தருகிறது. வடபால் ஸ்ரீ காசிவிசுவநாதர் விநாயகர் உள்ளனர். அம்பாள் அருள்மிகுமரகதாம்பிகை கருணை பெருகும் திருக்கண்களோடு காட்சி தருகின்ருர். மூன்ரும் முறையாக வலம்வரும்போது சுவாமி அம்பாள்கோயில்களுக்கு இடையே உள்ள சண்டிகேசுவரரையும் வழிபடலாம்.

**மூர்த்திகள் :**

சுவாமி பெயர் அருள்மிகு மரகதாசலேசுவரர். மற்றும் மரகதாசல நாதர், மலைக்கொழுந்தீசர் என்ற பெயர்களாலும் வழங்கப்பெறுவர். ஈங்கோய்மலை பச்சைநிறக் கற்களால் ஆகியமலையாதலின் அம்மலையில் எழுந்தருளிய இறைவர் மரகதாசலேசுவரர் எனப்பெற்ருர். மலையின் கொழுந்தே சிவலிங்கமாக விளங்குதலால் மலைக்கொழுந்தீசர் எனவும் வழங்கப்பெறுகிருர். இம்மூர்த்தி பிரமதேவன் பொருட்டுத் தானே தோன்றிய சோதி மயமான சுயம்புலிங்கமாகும். இச்சிவலிங்கத்தின் சோதி உருவத்தை சிவராத்திரியில் நான்காம்காலபூசையில்சூரியனின்

ஒளிக்கதிர்கள் படும்போதும், கர்ப்பூர ஆராத்திகளின்போதும் தரிசிக்கலாம். திருமால், பிரமன், இந்திரன் பூசித்ததால் அச்சுதேசுவரர், பிரமேசுவரர், இந்திரேசுவரர் எனவும் இவ்விறைவர் பெயர்கள் வழங்கப்படுகின்றன. கல்வெட்டுக்களில் ஈங்கோய்மலை ஆருடையார், மரகதாசலமுடைய நாயனுர் என்னும் பெயர்கள் காணப்படுகின்றன.

**தலமரம் :–** புளியமரம். 'ஆதிசேடன் அம்சத்தையும் சிவ சொரூபத்தையும்பெற்ற இம்மரத்தை வலம்வருவோர்க்கு இஷ்டசித்தி கள் கிடைக்கும்' எனத் தலமான்மியம் கூறுகிறது.

சுந்தரர் இத்தலத்திறைவரை வழிபட்டுப் பொன்வேண்டியபோது இறைவனருளால் இத்தலமரமாகிய புளியமரத்தின் காய்கள் எல்லாம் பொன்னுகிக் கீழேஉதிர்ந்தன என்றும் சுந்தரர் மகிழ்வுடன்அவற்றைப் பொருக்கி எடுத்துக்கொண்டு திருப்பாச்சிலாச்சிராமம் சென்று அத் தலத்திறைவர் வழங்கிய பொன்னையும் மாற்றுரைத்துப் பார்த்தபோது இரண்டும் ஒன்ருயிருந்தது என்றும் ஒரு செவிவழிச் செய்தி வழங்கு கின்றது. இதனை "சுந்தரருக்குப் புளியங்காய் ஈந்ததுகாண் அம்மானை ; சுந்தரருக்குப் புளியங்காய் ஈந்ததுவே யாமாயின் அத்துணையும் சொர்ணங்காண் அம்மானை" எனவரும் அம்மானைப் பாடல் ஒன்றும் தெரிவிக்கிறது.

**தீர்த்தம் :-** பிரம தீர்த்தம், விஷ்ணு தீர்த்தம், இந்திர தீர்த்தம், தேவிசரம், இயம தீர்த்தம், அமிர்தபுஷ்கரிணி, சர்ப்பநதி, காவிரி நதி ஆகியன இத்தலத் தீர்த்தங்களாகும். இவற்றுள் காலப் போக்கில் பல மறைந்தன.

**சர்ப்ப நதி :–** அகத்திய முனிவர் பொருட்டு இறைவன் தன் அணிகலனுகிய சர்ப்பத்தைத் தட்சகன் என்னும் நதியாக்கி ஓடச் செய்தார். அந்நதி இம்மலைக்கு வடமேற்கே ஓடிவந்து காவிரியில் சங்கமமாகிறது. அகத்தியர் மாசிமக நாளில் இச்சங்கமத்துறையில் நீராடி ஈ வடிவுபெற்று இறைவனை வழிபட்டு மீண்டும் அச்சங்கமத்தில் நீராடிப் பழைய உருவம் பெற்றுர் எனத் தலமான்மியம் கூறுகிறது அதனுல் இந்நதி (கொண்ட உருவம் மாறி என்ற பொருளுடைய) கொண்டாமாறி என வழங்குகிறது.

**காவிரிநதி :-** கங்கையிற் புனிதமானது காவிரி என்றுகூறுவர் அகத்தியர் குடகுமலை வழியாகப் பொதியம்சென்றபோது கமண்டலத் தில் அடங்கியிருந்த இக்காவிரியை இந்திரனின் வேண்டுகோளின்படி விநாயகர் காகவடிவாய் சென்று கவிழ்த்துவிட்டார் என்று கூறுவர். வான் பொய்ப்பினும் தான் பொய்யாது வளம் சுரக்கும் இந்நதியே

இத்தலத் தீர்த்தத்தில் முதன்மையானது. புண்ணிய காலங்களில் காவிரி சர்ப்ப நதிகளில் நீராடி மரகதாசலரை வழிபடுவோர் எல்லா நன்மைகளையும் எய்துவர்.

புராண வரலாறுகள் :

'மரகதாசலமான்மியம்' என்றநூல்யாழ்ப்பாணம் திரு. தாமோதரம் பிள்ளை அவர்களால் உரைநடையில் எழுதி வெளியிடப்பெற்றுள்ளது. ஈங்கோய்மலை சிவானந்த சாதன நிலயம் ஸ்ரீமத் அத்வயானந்த சுவாமிகள் அவர்கள், இத்தல வரலாற்றினை தத்துவார்த்தத்துடன் எழுதி வெளியிட்டுள்ளார். திரு. தி. பட்டுசாமி ஓதுவார் அவர்கள் எழுதிய தல வரலாறும் தேவஸ்தான வெளியீடாக வெளிவந்துள்ளது.

மரகதமலையின் தோற்றம் :

ஒரு காலத்தில் திருக்கயிலாயத்தில் ஆதிசேடனுக்கும் வாயு தேவனுக்கும் மனமாறுபாடு ஏற்பட்டுப் போராய் மூண்டது. இருவரும் தங்கள் வல்லமையைப் பரிசோதிக்க முற்பட்டனர். ஆதிசேடன் தன் ஆயிரம் படங்களால் கயிலையைப் போர்த்திக்கொண்டான். வாயுதேவன் கயிலையைப் பெயர்க்கமுற்பட்டான், உலகம் நிலை குலைந்தது. அஞ்சி நடுங்கிய தேவர்கள் பிரமனிடம் முறையிட்டனர். பிரமன் ஆதிசேடனிடம்வந்து இதுதகுமா என்றார். ஆதிசேடன் பிரமனிடம் ஐந்து தலைகளை மட்டும் தூக்கிப் பேச முற்பட்டான். அச்சமயம் வாயுதேவன் பெருங் காற்றால் கயிலைமலைச் சிகரங்கள் ஐந்தினைப் பெயர்த்து பல இடங்களில் வீழ்த்தினன். அவை திருக்காளத்தி, திரிசிரபுரம், இரத்தினகிரி, திரிகோணமலை, திருஈங்கோய் மலை ஆகியனவாகும். இவை தென்கயிலாயம் எனப்பெற்றன. அதுபற்றியே திருஈங்கோய் மலையும் தென்கயிலாயம் என்ற சிறப்பைப் பெற்றுத் திகழ்கிறது.

உமையம்மை இடப்பாகம் பெற்றது :

ஒருசமயம் திருக்கயிலாயமலையில் உமையம்மையோடு இறைவன் அன்பர்கட்கு அருள்புரிய எழுந்தருளியிருந்தார். திருமால் முதலிய தேவர்கள் அனைவரும் இறைவனையும் இறைவியையும் வணங்கி அருள் பெற்றுச் சென்றனர். பிருங்கிமுனிவர் மட்டும் உமையம்மையை வணங்காமல் இறைவனை மட்டும் துதித்துச்சென்றார். உமையம்மை நம்மை இம்முனிவர் மதித்திலரே என்று வருத்தமுற்றாள். இறைவன் சமாதானம் கூறியும் இறைவி அதனை மனங்கொள்ளாது திருஈங்கோய் மலை அடைந்து கடுந்தவம் புரிந்தாள். பெருமான் வெளிப்பட்டு யாது வரம் வேண்டுமென்று கேட்டார். பெருமாட்டி இறைவனுடைய

இடப்பாகத்திலே ஒன்றுபட்டு வீற்றிருக்கும் வரம் கேட்டார். இறைவனும் அவ்வாறே அருள்புரிந்து தம் இடப் பாகத்தை உமையம்மைக்கு அருளி அர்த்தநாரீசுவரராக இத் தலத்தில் எழுந்தருளியிருந்தார். பிருங்கி முனிவர் இத்தலத்தை அடைந்த காலத்தில் இறைவன் திருவுருவின் ஒரு பாதியில் உமையம்மை விளங்கக்கண்டு வண்டு உருவம்கொண்டு சிவபெருமானது கொப்பூழ் வழியாகத் துளைத்து இடமாகச் சிவபெருமானை மட்டும் வலம் வந்து வணங்கினர். உமையம்மை சினந்து முனிவரை நோக்கி உம் சரீரத்தில் சக்தி அம்சமான சதைப்பற்றை அளித்துவிடு என்றுர். முனிவர் தம் தவவலியால் உடலை உதறினர். சதைப்பகுதி கீழே விழுந்தது. எலும்புக்கூடாய் நின்ற முனிவர் நிற்கமுடியாமல் கீழே விழ முற்பட்டபோது இறைவன் முனிவர்க்குமூன்ருவது கால்ஒன்றைஅருளினர். முனிவர் மூக்காலுடன் கூத்தாடி இறைவனை வழிபட்டு அருள்பெற்றுர்.

**அகத்தியர் ஈ வடிவு கொண்டு பூசித்தது :**

முன்னெரு காலத்தில் அகத்திய முனிவர் தலயாத்திரையாகப் புறப்பட்டு காவேக் கடம்பரையும் மத்தியானச் சொக்கரையும் வழிபட்டு மாலையில் அகண்ட காவிரியைக் கடந்து ஈங்கோய் மலையை அடைந்தார். அப்போது கோயிற் பூசகர் வழிபாடு முடித்துத் திருக்காப்பிட்டுவிட்டுத் தம் இல்லம் சென்றுவிட்டார். அதனை அறிந்த முனிவர் மாலையில் இறைவனை வழிபடும்பேறு இன்று நமக்குக்கிடைக்கவில்லையே என்று வருந்தினர். அச்சமயம் ஒரு அசரீரி தோன்றிற்று. முனிவனே ஈ வடிவோடு உள்ளே நுழைந்துவந்து நம்மை வழிபடுக. இம்மலையின் மேல்பால் ஓடும் நதியில் முழுகினல் ஈ வடிவம்பெறலாம். வழிபாடு முடித்து மீண்டும் அந்நதியில் முழுகினல் பழையவடிவத்தை அடையலாம் என்று அசரீரி கூறிற்று. முனிவர் அவ்வாறே ஈ வடிவம் பெற்று மரகதாசலரையும் மரகதாம்பிகையையும் வழிபட்டு மலர்கள் தோறும் சென்று தேனைச் சேகரித்து இறைவனுக்கு அபிடேகம்செய்து எல்லாப்பேறுகளையும் பெற்றுர். அதனல் இம்மலை ஈங்கோய்மலை எனப்பெற்றது என்பது தலபுராண வரலாறு. இன்றும் அகத்தியர் ஈ வடிவோடு இத்தலத்தில் இறைவனை வழிபட்டு வருகின்ருர் என்பது ஐதிகம்.

**நவசித்தர் வழிபட்டது :**

திருக்கயிலைமலைக்குச் சென்று இறைவனை வணங்கி நவசித்தர்கள் அரிய தவம் செய்து பரமுத்தி அடைதற்குரிய தலம் ஒன்றை அருளுமாறு இறைவனை வேண்டினர். இறைவன் மரகதாசலம் சென்று தவம் புரியுமாறு கூறியருளினன். முனிவர்கள் இம்மலையை அடைந்து

ஒன்பது சிகரங்களிலும் தவச்சாலை அமைத்துக்கொண்டு தவம்புரிந்து வரங்கள் பலவும் பெற்றனர் அருள்பெற்ற முனிவர்கள் என்றும் இத் தலத்தில் வசித்துவருகின்றார்கள் என்பது ஐதிகம்.

## சுப்பிரப அரசன் வழிபட்டது :

இத்தலத்தில் இருந்த குரங்கு ஒன்று தலமரமாகிய புளியமரத்தில் கட்டிய தேனடையைப் பிய்த்து எடுத்துக்கொண்டு ஓடும்போது அத் தேனடையிலிருந்து தேன் துளிகள் மரகதாசலர் மீது விழுந்தன. அச்சிவபுண்ணிய விசேடத்தினால் குரங்கு சுப்பிரபன் என்ற அரசனாகப் பிறந்தது. சுப்பிரபன் முற்பிறவி வாசனையால் இத்தலத்திற்கு வந்து கோயில் திருப்பணிகள் பலவற்றையும் செய்து வழிபட்டு வந்தான். நாடோறும் குறுணி அளவு தேனபிஷேகம் செய்து பூசித்தான். ஒருநாள் தேன் கிடைக்காமல் வருந்தித் தன் காதுகளை அரிந்துகொள்ள முற்படும்போது இறைவன் அம்மன்னனுக்குக் காட்சி கொடுத்து அருள்புரிந்தார். இத்தலத்திறைவர்க்குத் தேன் அபிஷேகம் செய்தால் மிகுந்த பயனைக் கொடுக்கும் என்று தலமான்மியம் கூறுகிறது.

## வீதிகோத்திரன் முத்திபெற்றது :

அக்னி சர்மா என்ற ஆசாரியருக்கு இழைத்த குற்றத்தினால் பேய் வடிவம் பெற்றுத் திரிந்த வீதி கோத்திரன் இத்தலத்தில் கோபில முனிவர் அருளால் அமிர்த புஷ்கரணியில் - நீராடி சர்ப்பநதி சங்கமமாகும் காவிரித்துறையில் நீராடி மரகதாசலரை வழிபட்டுப் பழைய வடிவம் பெற்றான்.

## வழிபட்டோர் :

உமையம்மை, திருமால், பிரமன், இந்திரன். இயமன் ஆகியோர் வழிபட்டு அருள்பெற்றுள்ளனர். அகத்தியர், சுப்பிரபன், யமுனை, வியாசர், கண்ணுவர், உரோமசன்மர், மார்க்கண்டேயர், காசிபர், கௌதமர், பிருகு, பராசரர், கோபிலால முனிவர் முதலியோர் வழிபட்டுள்ளனர்.

மரகதாசலர்க்குத் தேன் அபிஷேகமும் நெய் தீபமும் மிக விசேடம். வைகாசி கார்த்திகை மாதங்களில் செய்யப்பெறும் தேன் அபிஷேகம் பெரும் புண்ணியத்தைத் தரும். சிரார்த்த காலங்களில் நெய் தீபம் ஏற்றினால் பிதிர்களுக்குத் திருப்தி ஏற்படும் எனத் தல மான்மியம் கூறுகிறது.

**அடிவாரம் கோயில் :**

ஈங்கோய்மலையின் அடிவாரத்தில் 1 கி. மீட்டர் தூரத்தில் திரு ஈங்கோய்மலை என்ற சிற்றூர் உள்ளது. அவ்வூரில் அழகிய கோபுரத் தோடு ஒரு கோயில் அமைந்துள்ளது. இங்குள்ள சுவாமி பெயர் ஸ்ரீ கயிலாயநாதர்; அம்மை பெயர் ஸ்ரீ கருணைகடாட்சி என்பதாகும். ஈங்கோய்மலைக்கோயில் தோன்றிய காலத்திலேயே இக்கோயிலும் தோன்றியதென்று கூறுகின்றனர். ஈங்கோய்மலைக்கோயிலின் உற்சவ விக்கிரகங்கள் யாவும் அடிவாரம் கோயிலிலிருந்துதான் புறப்படு கின்றன. பாதுகாப்பாக இங்குத்தான் உற்சவ விக்ரகங்கள் வைக்கப் பட்டுள்ளன.

**பூசை விழாக்கள் :**

காலை மாலை இரண்டு வேளைகளில் நாள் வழிபாடு நிகழ்கிறது. ஐப்பசி பௌர்ணமியில் அன்னாபிஷேகம் நிகழ்கிறது. கார்த்திகை மாதக் கார்த்திகை நாளில் சுடலைத் தீப விழாவும் மார்கழியில் திருப் பள்ளியெழுச்சியும் நடைபெறுகின்றன. தை மாதப் பிறப்பிலும் கார்த் திகைச் சோமவார நாட்களிலும் மாசி சிவராத்திரியிலும் விசேஷ பூசைகள் நிகழ்கின்றன. ஆடிப்பதினெட்டு, மார்கழித் திருவாதிரை, தைப்பூச விழாக்கள் மிகச் சிறப்புடையன.

**கல்வெட்டுக்கள் :**

இம்மலைமீதுள்ள இராசகோபுரத்தின் கிழக்குப் பக்கத்திலும் சுவாமி கோயில் கர்ப்பக்கிரகம் தென் வடபுற வெளிச்சுவர்களிலும் கல்வெட்டுக்கள் இருக்கின்றன.

இராசகோபுரத்தில் விஜயநகரமன்னர் கிருஷ்ணதேவமகாராயரின் கி. பி. 1517 ஆம் ஆண்டுக் கல்வெட்டு ஒன்று உள்ளது. அதில் கிருஷ்ணவேணி ஆற்றங்கரையில் அவ்வரசர் தங்கியிருந்தபோது தை மாதம் மகரசங்கிராந்தியில் உண்டவல்லி அனந்தசயனர்,விஜயவாடா மல்லிகார்ச்சுனர் இவர்கள் திருமுன்னர் சோழமண்டலத்திலுள்ள பல சிவ விஷ்ணு கோயில்களுக்காகப் பதினாயிரம் வராகன் பொன் சர்வமானியமாக விட்டதைக் குறிக்கிறது. இக்குறிப்பில் திருஈங் கோய்மலைத் திருக்கோயிலும் இடம்பெற்றிருக்கிறது.

கர்ப்பக்கிரக வெளிச்சுவர்களில் இராசேந்திரசோழன் காலத்துக் கல்வெட்டுக்கள் உள்ளன.

அவற்றுள் ஒன்று “ தென்கரை இராசாதிராசன் சூரலூர் கூற்றம் உடைய மரகதாசலமுடைய நாயனாருக்குத் திருவிளையாட்டுக்

காகவும், ஸ்தானிகம், பிராமணுள், பண்டாரி, மெய்காவல் முதலான பரிசனங்களுக்காகவும் சர்வமானிய பூதானசாசனம் செய்துகொடுத் ததைத் தெரிவிக்கிறது.

மற்ருெரு கல்வெட்டில் திரிபுவனச்சக்கரவர்த்தி வீரதேவனது 36 ஆம் ஆண்டில் இராசராச வளநாட்டுத் திருவாலி நாட்டுத் திருசுங்கோய் ஊருடையார் என்று கூறும் இக்கோயில் ஆளுடைய பிள்ளையாருக்கும், திருநாவுக்கரசு தேவர்க்கும், ஆலாலசுந்தரப் பெருமானுக்கும், நக்கீரதேவர்க்கும் திருப்படி மாற்றுக்கும், விஞ்சனத் துக்கும் வடகரை இராசராச வளநாட்டுமலே ஸ்ரீ ஜயங்கொண்டசோழ சதுர்வேதிமங்கலத்துப் பெருங்குடி மகாசபையார் நிலம் விற்றுக்கொடுத் தனர் என்பது கூறப்பெற்றுள்ளது.

---


# "ஸ்ரீ இராமகிருஷ்ண விஜயம்"

**( மாதப் பத்திரிகை )**

கடந்த 57 ஆண்டுகளாக - தமிழகத்தின் சமய வளர்ச்சிக்காக - ஸ்ரீ இராமகிருஷ்ண மிஷனின் சார்பாகத் தமிழில் வெளிவருகிறது.

மகான்களின் வாழ்க்கையில் நடைபெற்ற சுவையான நிகழ்ச்சி கள், அன்ருடவாழ்க்கையில் மதத்தைக் கைக்கொள்ள வேண்டிய வழி முறைகள், சாஸ்திரங்களின் உட்பொருள் விளக்கங்கள், ஆத்ம தத்துவம் குறித்த ஆராய்ச்சி, உபநிஷத உண்மைகள், இதிகாசங்கள், பக்தி, வேதாந்தம், சைவ சமயக் கருத்துக்களேக்கொண்டது.

ஸ்ரீ இராமகிருஷ்ண பரமஹம்ஸர், ஸ்ரீ சுவாமி விவேகானந்தர் ஆகியோரின் குரலாக விளங்கி மத உண்மைகளேப் புகட்டுகின்றது. உங்கள் உள்ளம் உயர, நீங்கள் ஹிந்து மதத்தை உள்ளபடியே புரிந்து கொள்ள அவசியம் படிக்கவேண்டிய பத்திரிகை இது,

—: சந்தா விபரம் :—

வருட சந்தா ரூ. 7—00 ] [ ஆயுள் சந்தா ரூ. 100—00

ஆயுள் சந்தாவைப் பகுதி பகுதியாகவோ, மாதம் பத்துருபாய் ஆகவோ, மொத்தமாகவோ பின்வரும் முகவரிக்கு அனுப்பிவையுங்கள்.

ஸ்ரீ இராமகிருஷ்ண விஜயம் காரியாலயம்,
ஸ்ரீ இராமகிருஷ்ண மடம்,
மயிலாப்பூர், சென்னை - 600004.

# மெய்கண்ட நூல்கள்

( ஆராய்ச்சி முன்னுரை )

தருமையாதீனத் தமிழ்ப்புலவர்.
திரு. கு. சுந்தரமூர்த்தி எம். ஏ.,

( மலர் 37, இதழ் 2, பக்கம் 84 இன் தொடர்ச்சி )

## 2. வினா விடை வகையிலும் வினா வகையிலும் அமைந்தவை :-

### அ. வினா விடை வகையில் அமைந்தது - உண்மை விளக்கம் :-

தம் கருத்தைப் பிறருக்கு உணர்த்த எத்துணையோ முறைகள் உள்ளன. அவற்றுள் ஒன்று வினாவிடை வகையில் தம் கருத்துக்களைத் தருவதாகும். பல வினாக்களைத் தாமே எழுப்பி அவற்றிற்குரிய விடைகளையும் கூறும் முறையில் அமைந்தது இது. இங்கு வினவுவோர் மனவாசகங் கடந்தார் ஆகவும், விடையிறுப்போர் மெய்கண்டாராகவும் விளங்குகின்றனர். இதன்கண் எழுப்பப்பெறும் வினாக்கள் ஆறு: (1) ஆறாறு தத்துவங்கள் எவை? (2) ஆணவம் என்பதென்ன? (3) கன்மம் என்பதென்ன? (4) உயிர் என்பதுஎது? (5) இறை என்பது எது? 6. இறைவன் திருவைந்தெழுத்து உடனாய் நின்று திருக்கூத்து இயற்றும் நிலை எது? என்பன. இவ்வினாக்கள் இந்நூலின் இரண்டாவது பாடலில் உள்ளன. இவற்றிற்கு விடை கூறுமுகமாக இந்நூல் முழுமைபெற்று விளங்குகின்றது. இவ்வினாக்களுள் ஆறாவது வினாவும் அதற்குரிய விடையும் இந்நூலகத்து விளங்குதல் இதன் தனிச் சிறப்பு ஆகும். முடிவில் குரு லிங்க சங்கம வழிபாடே பிறவிப் பிணிக்கு மருந்தாகும் எனக் கூறி நூலை நிறைவு செய்துள்ளார் ஆசிரியர் மனவாசகம் கடந்தார்.

### ஆ. வினாவகையில் அமைந்தவை :

ஆசிரியர் தாம் உணர்த்தும் கருத்துக்கள் பலவற்றையும் முறையாகவும் நெறியாகவும் விளங்க எடுத்துரைக்கும் முறை ஒன்று. அவ்வாறன்றிக் கேட்போர்க்கு உய்த்துணர்வு பெருகுவான் வேண்டி சில கருத்துக்களைச் சிந்தனை செய்யுமாறு தூண்டி யிருத்தலும் உண்டு. இவ்விரண்டாம் வகையில் அமைந்தனவே இங்குக் குறிக்க இருக்கும் இரு நூல்களுமாகும். இவ்விரு நூல்களையும் அருளிய ஆசிரியர்கள்

ஒருவரல்லர். எனினும் இவ்விருவர்தம் சிந்தனையும் ஒரு போக்கில் அமைந்துள்ளமை குறிப்பிடத்தக்கதாகும். இவ்விரு ஆசிரியர்களும் தத்தம் நூல்களில் வினுக்களை மட்டுமே எழுப்பியுள்ளனர். அவை கேட்போரின் சிந்தனையைத் தூண்டி எழுச்சியும் ஆர்வமும் மிகுமாறு செய்கின்றன. இவற்றிற்குரிய விடையை இவர்கள் அருளிய நூல்களிலும் பிற நூல்களிலும் நாம் கண்டு தெளிதல் வேண்டும். திருஞானசம்பந்தரின் வினுவுரைப் பதிகங்கள் இத்தகையவை.

## (i) இருபா இருபஃது :

வெண்பாவும் ஆசிரியமுமாகிய இருவகைப் பாக்களாலும் மாறி மாறி வரும் இயல்பினது ; இது 20 பாடல்களை யுடையது ஆதலின் இப் பெயர் பெற்றது. பாடல்களை நினைவுகொள்ளுதற்கேற்ப அந்தாதித் தொடையால் அமைந்துள்ளது இது. தம் குருமூர்த்தியாகிய மெய் கண்டாரைப் பல்லாற்றானும் போற்றிப் பல்வேறு வினுக்களை வினவு முறையில் அருளிச் செய்யப் பெற்றுள்ளது. தாம் கேட்கும் வினுவிற்கு வெல்லும் சொல்லின்றி விடையளித்தல் வேண்டுமென ஆசிரியர் விண்ணப்பித்துக்கொண்டிருப்பது விடைகாண்டற்குரியார் சிந்தனையில் எண்ணத் தக்கதொன்றாகும். வினுக்கள் பலவும் இறை, உயிர், தளை ஆகிய முப்பொருள் உண்மைபற்றியவையே. அவற்றுள் சில.

1. குருமூர்த்தியே ! நீ என்னை விட்டு நீங்காதிருப்பிரேல் எனக்கு அறியாமை எவ்வாறு வாய்த்தது? ஆணவ மலத்தால் எனின் அதற்குப் பகையாய நீ உடனுயிருக்கும்பொழுது அதுவும் உடனிருப்பது எங்ஙனம் பொருந்தும்?

2. அடியேனுக்கு அறிவுறுத்தும்பொழுது நீ உடனுய் நிற்பையோ ? வேருய் நிற்பையோ ?

3. குருவாய் எழுந்தருளி எனக்கருளுமிடத்து எவ்வாறு அருள் புரிகுவை ? தகுதி கண்டு அருள்புரிவாய் எனில் தகுதியே அமையும், நீ வேண்டுவதில்லை. தகுதி இன்றெனில் நீ அருளும் மெய்யுணர்வை யான் பெருதொழிவேன். தகுதியின் பயனுக அவை வரும் எனில் தகுதி என்பது அறிவற்றது. அது நின்னை எங்ஙனம் கொணரும்? மலநீக்கம் தகுதியாமெனில் அது தானே நீங்கிற்று ? அன்றி நான் நீங்கினேனு ? இவ்விரு திறனுள் எதுவாயினும் நீ தேவையில்லை என்பது பெறப்படும். இவற்றிற்கு விடை கூறுவாயாக. இவை முதற் பாடற்கண் காணப்பெறும் வினுக்களாகும். இவ்வினுக்களுக்கு மட்டும் விடை திருமுறையிலிருந்து தொட்டுக்காட்டப்பெற்றுள்ளது. எனவே சித்தாந்தச் செம்பொருளில் ஐயமேற்படின் திருமுறைகளையே தெளிதற்குரிய கருவிகளாய்க் கொள்ளவேண்டும் என்பதும், இதனுல்

விளங்குகின்றது. 'காண்பார் யார்? கண்ணுதலாய்க் காட்டாக்காலே' எனவரும் நாவரசர் திருவாக்கும், 'ஆட்பாலவர்க்கருளும்' என வரும் ஞானசம்பந்தர் திருவாக்கும், இவ்வினாக்களுக்கு விடைதரும் என்றறிக, எனத் தம் குருமூர்த்தி கூறுவதாகக் கூறியுள்ளார். திருஞானசம்பந்தர் அருளிய திருப்பாசுரத்தைப்', பாண்டியன் கேட்பக் கிளந்த மெய்ஞ்ஞானம்' என ஆசிரியர் குறித்திருப்பது அதன் அருமையை விளக்குவதாகும்

1. அறிதலும் அறியாமையுமுடைய அடியேன் என்னை அறிவுடைப் பொருள் என்பேனா? அறியாமையுடைய பொருள் என்பேனா?

2. ஆணவம் கன்மம் மாயை ஆகிய மும்மலமும் நானே தேடிக் கொண்டவையா? அல்லது நீ கொடுத்தவையா? அன்றி அவை இயல்பாகவே என்னிடத்து அமைந்தவையா?

3. ஆணவ இருள், ஒளியாகிய உன்முன்னும் நில்லாது; அடியேனுக்கும் தானே அறியும் அறிவில்லை. அங்ஙனமிருக்க அடியேன் இருளைப் பற்றிக்கொண்டது எங்ஙனம்?

4. அடியேன் பொறிகளை எவ்வாறு பற்றினேன்? ஐந்தவத்தைகளை எவ்வாறு அடையலானேன்? எவ்வாறு புவனங்கள்தோறும் பிறந்து இறந்து போக்கு வரவு புரிபவன் ஆயினேன்? என்பன போன்ற வினாக்கள் இந்நூலிலிருந்து எழுப்பப்படுகின்றன. 'இருநிலனாய்த் தீயாகி நீருமாகி', 'உன்னில் துன்னி உனைவிடில் துன்னுவை' என்பனவாகிய திருமுறைத் தொடர்கள் இந்நூலில் அமைந்து அணி செய்கின்றன.

## (ii) வினாவெண்பா:

இந்நூல் மிகச் சிறியது. 13 பாடல்களையுடையது. தம் குருமூர்த்தியாகிய மறைஞானசம்பந்தரை வினாவு முகமாக அமைந்தது. இவற்றுள் 11, 13 ஆகிய இருபாடல்களும் வினாவுதலின்றி அமைந்தவை. காண்பான், காட்டுவான், காணப்படும்பொருள் என்ற மூவகை நினைவுகளையும் நீங்கி இறையுணர்வோடு ஒன்றிக்காண்பவர்களே வீடுபேறு அடைந்தவர்களாவர். அல்லாதார் அப்பேற்றினை அடையத் தக்காரல்லர். இறைவன் அருளையே கண்ணாகக்கொண்டு மெய்யுணர்வார்க்கு அச்செம்பொருள் உணர்தற்கெளிதாகி இன்பினை நல்கும். அவ்வனுபவப் பேற்றிற்கு இந்நூல் துணை செய்யும். இந்நூல் உண்மை அறியாதார் ஊமன் கண்ட கனவினை ஒப்ப ஒன்றியிருந்து தெளிதற்கும், தெளிந்தவாற்றை உணர்த்துதற்கும் உணராதவராவர். இவையே இப்பாடல்களின் கருத்தாகும். எஞ்சிய 11 பாடல்களில்

பல அரிய வினக்கள் இடம்பெற்றுள்ளன. அவற்றுள் சில:- திரு மருதூர்ச் சம்பந்தா! ஒளியும் இருளும் ஓரிடத்துக் கூடல் அரிது. அங்ஙனமாகவும் கொடியேனிடத்து நீ எவ்வாறு பொருந்தி நின்றாய்? கேவல நிலையில் ஒன்று மறியாமலும், சகல நிலையில் யாவற்றையும் மயங்கியும் உணரும் அடியேன் உன் திருவருளால் யாது பெற வல்லேன்? அருவம் உருவ மாகாது; உருவம் அருவமாகாது. அருஉரு இரண்டும் ஒரு பொருட்கண்ணே பொருந்தமாட்டா. அங்ஙனமாயின் நினைவு மாத்திரையில் வடிவம் கொள்ளும் இறைவன் நிலை எத்தகையது? என்பன போன்ற வினக்கள் நூலைக் கற்போரின் சிந்தனையையும் எழுச்சியையும் தூண்ட வல்லனவாகும்.

## 3. மறுப்புவகையில் அமைந்தவை:

### சிவஞான சித்தியார் பரபக்கமும் சற்கற்பநிராகரணமும்:

இவை பிற சமயத்தாரின் கொள்கைகளைக் கூறி மறுக்க எழுந்தன வாகும். ஈண்டுப் பிற சமயங்கள் என்று கூறும்பொழுது நம் சைவ சித்தாந்தம் பிறசமயங்களை எவ்வாறு பாகுபடுத்தி வைத்துள்ளது என்பதையும் ஈண்டு அறிதல் தகும். பல்வேறு சமயங்களையும் நால் வகையில் அடக்கிக் காண்கின்றது நம்சமயம். அவை;- 1. புறப்புறச்சமயம், 2. புறச்சமயம், 3. அகப்புறச்சமயம், 4. அகச்சமயம் என்பன. நம் சைவ சித்தாந்தம் முப்பொருள் உண்மையை நாட்டுதற்குக் காண்டல், கருதல், உரை முதலிய அளவைகளை எல்லைகளாகக் கொள்ளும். காண்டல் என்பது கண்ணால் காணும் காட்சி அளவையைக் கொண்டே ஒன்றைத் தெளிவிப்ப தாகும். கருதல் என்பது இங்ஙனம் அன்றாயின் இது கூடாது என்று உணரும் முகமாக ஒன்றைத் தெளிவிப்பதாகும். உரை என்பது இறைவனாலும் அவனருள் வழிப்பட்ட அருளாளர்களாலும் அருளிச் செய்யப்பெற்ற நூல்களை மேலெல்லையாகக்கொண்டு ஒன்றைத் தெளிவிப்பதாகும்.

### புறப்புறச்சமயம்:

மேற்கூறிய வகையில் உரை எனக் கருதத் தக்கது வேத ஆகமங் களும் திருமுறைகளுமாகும். வேத ஆகமங்களையும் திருமுறைகளையும் ஒப்புக்கொள்ளாதவர்களைப் புறப்புறச் சமயத்தவர் என்பர். சைவ சித்தாந்தத் துணிவுடையோர் கொள்கை வகையில் இவர்களைத் தமக்கு மிகமிகத் தொலை தூரத்தராகக் கருதுவர். இவ்வகையினர் அறுவர். 1. உலகாயதர், 2. சமணர், நால்வகைப்பௌத்தர்: (3. சௌத்திராந்திகர், 4. யோகாசாரர், 5. மாத்யமிகர், 6. வைபாடிகர்)

### புறச்சமயம்:

சைவ சித்தாந்திகள் வேத ஆகமங்கள் இரண்டையும் ஒப்புக் கொள்வர். இச்சமயத்தார்கள் வேதங்களை மட்டும் ஒப்புக்கொள்வர்;

சிவாகமங்களை ஒப்புக்கொள்ளார். ஆதலின் சைவ சித்தாந்தத் துணிபுடையோர்க்கு இவர்களும் தொலைதூரத்தவர்களாகவே ஆகின்றனர். ஆதலின் இவர்களைப் புறச்சமயத்தவர் என்பர். இத்தகைய சமயங்கள் ஆறுரும். அவை:- 1. நியாயம், 2. சாங்கியம் 3. யோகம், 4. மீமாம்சை, 5. வேதாந்தம், 6. பஞ்சராத்திரம் எனப்பெறும் வைணவம்.

**அகப்புறச்சமயம் :**

இவர்கள் வேத சிவாகமங்களை ஒப்புக்கொள்வர். எனினும் சைவ சித்தாந்தத் துணிபுடையோர்க்கு ஒரு சில வகையில் கொள்கை வேறுபாடுடையவர்கள் ஆவர். ஆதலின் இவர்களை அகப்புறச்சமயத்தவர் என்பர். இவ்வகைய சமயம் ஆறுரும். அவை:- 1. பாசுபதம், 2. மாவிரதம், 3. காபாலம், 4. வாமம், 5. பைரவம், 6. ஐக்கிய வாதசைவம் என்பன, இவற்றுள் முன்னைய ஐந்தும் வேத ஆகமங்களைப் பொதுவாகவே ஒப்புக்கொள்வன. அவற்றோடு அவற்றிற்கு வேருகிய பாசுபதம் போன்ற நூல்களையும் தமக்கு மேல் எல்லைக்குரிய சிறப்பு நூல்களாகக்கொள்கின்றன. ஆறுவதாகிய ஐக்கியவாத சைவம் சைவசித்தாந்தத்தோடுபெரிதும் ஒத்திருப்பினும் சைவசித்தாந்தத்துள் இன்றியமையாததாய்க் கூறப்பெறும் ஆணவ மலம் என்பதை ஒப்புக்கொள்ள வில்லை. ஆதலின் இதுவும் அகப்புறச் சமயத்ததாயிற்று.

**அகச்சமயம் :**

இவ்வகையில் எண்ணப்படும் சமயங்கள் சைவ சித்தாந்தத்தோடு மிகவும் நெருங்கியவை. வேத ஆகமங்களை முழுமையாக ஒப்புக்கொள்பவை. முப்பொருள் உண்மை பற்றிய கருத்துக்களையும் முழுமையாக ஒப்புக்கொள்பவை எனினும் முத்தி நிலையில் இவை சைவ சித்தாந்தத்தோடு வேறுபடுகின்றன. ஆதலின் இவற்றை அகச் சமயமென அடக்கினர். இவ்வகையன: 1. பாடாணவாத சைவம், 2. பேதவாத சைவம், 3. சிவசமவாதசைவம், 4. சிவ சங்கிராந்தவாதசைவம், 5. ஈசுவரஅவிகாரவாதசைவம், 6. சிவாத்து வித சைவம். (தொடரும்)

---

## பார்வையாளர் குறிப்பு

திருக்கயிலாய பரம்பரைத் தருமையாதீனம்

**ஸ்ரீ வைத்தியநாதசுவாமி தேவஸ்தானம், வைத்தீசுவரன்கோயில்.**

இத்திருத்தலத்திற்கு வந்து வைத்தியநாதசுவாமியைத் தரிசிக்கும் பாக்கியம் இன்று கிட்டியது.

(ஒ-ம்) சி. சுப்பிரமணியம்

29—1—78. சி. ஆர். இராமசாமி.

# சிவ புண்ணியங்கள்

பிரவசனரத்நம். வியாகரணசிரோமணி, இந்திவிசாரத்,

**திரு. P. S. கிருஷ்ணமூர்த்தி சாஸ்திரிகள்,**

மகா பாரதத்தில் ஒரு சிறுகதை உண்டு. 'தனது பேடையைப் பிடித்துக்கொண்டு, பசியால்வாடி களைப்படைந்து சரண்புகுந்த ஒரு வேடனுடைய வாடுறு பசியைப் போக்க வெந்தீமூட்டி அதில் குதித்து உயிர்த் தியாகம் செய்தது ஒரு புரு. அது அத்தீயில் குதிக்கும் முன் "நாங்கள் அன்றுடம் உணவுதேடி வாழ்பவர்கள். நாளைக் கென்று தேடிவைப்பவர்கள் அல்ல" என்று கூறிற்று' என மகா பாரதத்தில் காண்கிறோம்.

நாம் அப்பறவையின் கூற்றைச் சிறிது ஆழ்ந்து சிந்திக்க வேண்டும். பகுத்தறிவில்லாதவை பறவைகள். அவைகளுக்குக் கடந்ததைப் பற்றிய ஏக்கமில்லை. நாளைய பற்றிய கவலையுமில்லை. அதுமட்டுமா! தாய்ப்பறவை தனது குஞ்சுகளைப் பேணிவளர்க்கிறது. இறகு முளைத்ததும் குஞ்சுகள் தாய்ப் பறவையை விட்டுப் பிரிந்து செல்கின்றன. அவைகளைப்பற்றித் தாய்ப்பறவை வருந்துவதுமில்லை. அவைகளிடமிருந்து பதிலுபகாரத்தை எதிர்பார்ப்பதுமில்லை. ஒருவாறு நிம்மதியுடன் வாழ்கின்றன.

மனிதவர்க்கமோ பகுத்தறிவைப் பெற்றிருந்தும் அவ்வறிவை நல்வழியில் பயன் படுத்தாமல் அல்லல்படுகிறது. பூதவுடலைப் பெரிதாக எண்ணி மேன்மேலும் துன்பக்கடலில் விழுந்து தவிக் கின்றது. அதற்கு எப்போதும் ஏக்கமும் கவலையும்தான். ஒரு சிறு பொழுதும் நிம்மதியில்லை. ஆன்மாவை உணர்வதில்லை. காட்டக் காணும் இயல்புடைய கண்ணுக்கு உருவத்தைக் காட்டித் தானும் காண்கின்ற உயிர்போல, உயிர், பொருளை அறியும்படி முதல்வன் தம்மோடுஇயைந்து நின்று அறிவித்துக்கொண்டிருக்கிறன் என்ற உண்மையையும் அறிவதில்லை. பாசவலையில் சிக்கித் தவிக்கின்றது. காமம், குரோதம், லோபம், மோஹம், மதம், மாத்ஸர்யம் என்ற ஆறு பகைவர்கள் வசமாகி நிம்மதியில்லாமல் அல்லல்படுகிறது. மன அமைதியில்லையேல் சுகம் ஏது?

பதியாகிய சிவஸ்வரூபத்தை ஆன்மா நாடாதவரை மனச் சாந்தியையோ நித்யாநந்தத்தையோ அடைவதெப்படி? சிவமல்லவோ

ஆனந்தஸ்வரூபம். சிவாநந்தம்தான் சீவாநந்தம். சிவானந்தம் பெற அவன்தாளைப் பற்றவேண்டும் என்று சிவானுபூதிமான்கள் காட்டியுள்ளனர். பதியை நாடி நித்யாநந்தம் பெற சில வழிகளை ஸ்காந்தம் எடுத்துரைக்கின்றது. அவைகள் சிவபுண்ணியங்கள் எனப்படும்.

சிவாலயங்களை நிர்மாணித்து பரிவார தேவதைகளுடன் ஈசனைப் பிரதிஷ்டை செய்து முறைப்படி நித்யபூஜை, நைவேத்யம் இவை களுக்கு ஏற்பாடுசெய்வது ஒருசிறந்த சிவபுண்ணியமாகும். அவரவர் கள்ஈட்டிய பொருளுக்குத் தக்கவாறு இப்பணியில் பங்கு கொள்ளலா மல்லவா?

திருவிளக்கிடும் பணியும் ஒரு சிவபுண்ணியமாகும். அதற்கென அறக்கட்டளை நிறுவுதல் மிகச் சிறந்த பணியாகும். இப்பணியின் சிறப்பைக் கருதியே தருமை ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்கள் இப்பணியைச் செய்து யாவரும் நலம் பெற வேண்டும் என்று திருவுளம் கொண்டு வேளூர் தேவஸ்தானத்தில் இவ்வறத்தைச் செய்யும்படி அன்பர்களைத் தூண்டி, பலரும் அதில் பங்குபெறும்படி அருள்பாலித்துவருகிறுர்கள். ஆலயத்துக்கு தினம் செல்லும்போது திருவிளக்கிற்கு எண்ணெய் கொண்டுசெல்வது நம் பெரியோர்கள் செய்துவந்த சிறந்த அறமாகும்.

திருக்கோயில்களில் குளம், கிணறு தோண்டுவதும் பூச்செடிகளை யும் பயனுள்ள மரங்களையும் நட்டு வளர்ப்பதும் ஒரு சிவபுண்ணிய மாகும்.

திருவிழாக்களை நடத்தி கோயில்களுக்குச் செல்லாதவர்களுக்கும் ஈசனைக்காணும் வாய்ப்பளிப்பதும் சிறந்த பணியே.

ஜீர்ணமான ஆலயங்களைப் புதிப்பித்து தினந்தோறும் பூஜைகள் முறைப்படி நடக்கும்படி செய்வதும், பூஜைசெய்யும் சிவாசாரியப் பெருமக்களுக்கு குடும்பக்கவலையில்லாமல் வீடு முதலியவைகொடுத்து உதவுவதும் ஒரு அறப்பணியாகும்.

தனது குருவை தினம் வணங்குதல்வேண்டும். நேரில் குருவைக் காணும்போது வலம்வந்து வணங்கவேண்டும். குருவுக்கு சுச்ருஷை யையும் செய்யவேண்டும். இது ஒரு சிறந்த சிவபுண்ணியமாகும். சிவஞானத்தைக்கொடுப்பவர் குருவேயல்லவா ? ஞானத்தை விரும்பி சரியை, கிரியை, யோக நெறியில் நிற்கும் உயிர்களுக்கு உள்நின்று உணர்த்திவந்த முதல்வனே குருவுருவில் தோன்றி சிவஞானத்தை உணர்த்தி அருளுகிறுன் என்று சாத்திரம் பேசுகிறது. ஆகவேதான் குருவை வணங்குவதும் ஒரு சிவ புண்ணியமாகும்.

சிவபக்தர்களுக்குக் குடியிருக்க வீடு கொடுப்பதும், சிவபுராணங்களை வெளியிட்டுப் படிக்கக்கொடுத்துதவுவதும், பூஜைக்கு சிவலிங்கத்தையும், தரிக்க விபூதி உருத்திராக்ஷங்களையும் சிவபக்தர்களுக்குக் கொடுப்பதும் ஒரு சிவ புண்ணியமாகும். சிவபக்தர்களைக்கண்டதும் எழுந்து மரியாதைசெய்வதுடன் அவர்களை வணங்கவும்வேண்டும். அவர்களுடைய காரியங்களுக்கு மனத்தாலும் தீங்கு நினைக்கலாகாது. நம்மால் முடிந்தவரை பணத்தாலோ, உடலாலோ, சொல்லாலோ, மனத்தாலோ அவர்களுக்கு உதவிசெய்ய முன்வரவேண்டும்.

இவ்விதம் செய்யப்படும் சிவபுண்ணியங்கள் இம்மையில் தனதான்ய விருத்தியையும் சந்தானஸமிருத்தியையும் கொடுத்து சுகபோகங்களைக் கொடுக்கின்றன என்றும், மறுமையிலும் சிவலோகத்தில் சிவஸாயுஜ்யத்தையும் அளிக்கின்றன என்றும் ஸ்காந்தத்தில் சொல்லப்பட்டிருக்கிறது.

நம் மூதாதையர்கள் இச்சிவபுண்ணியங்களைச் செய்துவந்தார்கள் என்பதை நம் நாட்டிலுள்ள பெருங்கற்கோயில்களும் திருமடங்களும் சாட்சிகளாக இருந்து அறிவிக்கின்றன. நாமும் இவ்வறப்பணிகளில் நம்மை அர்ப்பணித்து நமது ஆன்மா உய்ய வழிதேடுவோமாக.

---

# மூவர் திருமுறைத் தலங்கள்

பொங்கிவரு காவிரி நதிக்குவட பாலில்
பொருந்தும் அறு பத்துமூன்று
புண்ணிய தலங்கள்தென் பாலில்நூற் றிருபத்தேழ்
பூவிலுயர் பாண்டி நாட்டில்
தங்குபதி ஈரேழு, மலைநாட்டில் ஒன்றேழ்
தலங் கொங்கில் நடுநாடதில்
சாருமிரு பானிரண்டு ஈழத் திரண்டொன்று
தலமுறுந் துளுவ மதனில்
துங்கமுற வெண்ணான்கு நற்பதிக ளாகுமுயர்
தொண்டைநா டதனின் வடபால்
தொல்பதிகள் ஐந்திவைகள் மூவர்பா டியதலம்
சொல்லினம் உளவனந்தம்
திங்களொரு கங்கைபுனை யுஞ்சடை யசைந்திடத்
திருநடம் புரிசரணனே
சிவசிதம் பரவாச சிவகாமி உமைநேச
செகதீச நடராசனே.

— நடராசசதகம்.

# முளைக்கீரை - (தண்டுக்கீரை)

**திரு. மு. விட்டல்** எம்.எஸ்ஸி., (வேளாண்மை)

இதில் பலவகை உண்டு; இவ்வகைக் கீரைகள் கோடையில் அதிகமாகப்பயன்படுவதாயினும், குளிர்காலத்திலும் பயிரிடலாம். இக் கீரைகளைத் தென் இந்தியாவில் ஆண்டு முழுதும் பயிரிடலாம். முளைக் கீரை, தண்டுக்கீரைகளில்,

(100 கிராம் கீரையில் அடங்கிய முக்கிய சத்துக்கள்)

| | | | |
|---|---|---|---|
| தாதுப்பொருள்கள் | 2·7 கிராம் | குளோரீன் | 88 மி. கி. |
| புரதம் | 4·0 ,, | உயிர்ச்சத்து 'எ' | 9200 I. ய. (அனைத்துலக அளவிடு) |
| நார்சத்து | 1·0 ,, | | |
| கொழுப்பு | 0·5 ,, | உயிர்ச்சத்து 'சி' | 99 கிராம் |
| ஈரம் | 85·7 ,, | சுண்ணம்பு | 397·0 மி. கி. |
| இதரமாவுப்பொருள்கள் | 6·3 ,, | ஆக்காளக் அமிலம் | 772·0 மி. கி. |
| சோடியம் | 230 மி. கி. | | |
| பொட்டாசியம் | 341 ,, | பாஸ்பரஸ் | 83·0 ,, |
| கந்தகம் | 61 ,, | இரும்பு | 25·5 ,, |

தாது உப்புக்கள், உயிர்சத்து 'எ' இவைகளை இக்கீரை அதிக மாகப் பெற்றிருத்தல் அறியலாம்.

**மருந்துக் குணங்கள் :**

இதை வெங்காயம், பச்சைமிளகாய் உடன் சேர்த்து கடைந் துண்ண, உட்சூடு, இரத்தக் கொதிப்பு, பித்த எரிச்சல் முதலியவை கள் சாந்தப்படுவதுடன் கண்களுக்குக் குளிர்ச்சி ஏற்படும். இக்கீரை களை வயதுமுதிர்ந்து தளர்ந்தவர், பாலர் முதல் யாவரும் உண்ணலாம். இதை நாடோறும் உபயோகித்தால் நல்ல பசியைத்தரும். சொறி, சிரங்கு முதலியவைகள் நீங்கும். இதைக் கீழ்க்கண்ட பாடல்மூலம் அறியமுடிகின்றது.

தளர்ந்தார்க்கும் பாலருக்குந் தக்கவய தோர்க்கு
பிளங்கீரை நாவுக் கிதமாய் — கிளம்பு
சுரகாசம் போக்குந் தொடர்பசியுண்டாகும்
பிரகாச மாயெடுத்துப் பேசு.

— பதார்த்தகுண விளக்கம்.

**சாகுபடி முறை :—** விதைத்த 15 முதல் 20 நாட்களுக்குள் பிடுங்கி உபயோகிக்கும் கீரையை முளைக்கீரை என்றும் வயலிலே விட்டு அதிகமாக 6 மாதம் வரை வைத்திருந்து உபயோகிப்பதைத் தண்டுக்கீரை எனவும் வழங்குவர்.

**புதிய வகை:—** கோ. 1. (Co 1 Amaranthus)

கோவை வேளாண் கல்லூரியினின்று வெளியிட்ட வகையாகும். இதை முளைக்கீரையாகவும், தண்டுக்கீரையாகவும் பயன்படுத்தலாம்.

**பருவம் :—** ஆண்டு முழுவதும் பயிரிடலாம்.

**நிலம் தயாரித்தலும், இடைவெளியும் :—** நான்கைந்து முறை நிலத்தை நன்கு உழுது (80 செ. மீ. × 80 செ. மீ.) பாத்தியமைத்து விதையைத் தூவுதல்வேண்டும். தண்டுக் கீரையாகப் பயன்படுத்த 45 செ. மீட்டர் அளவுள்ள பாரின் பக்கத்தில் விதையை வரிசையாக விதைக்கலாம். 3 வாரம் கழித்து 15 செ. மீ. முதல் 20 செ. மீ. இடைவெளிவிட்டுக் களைந்து எடுத்தவற்றை முளைக்கீரையாகப் பயன்படுத்தலாம்

**விதையளவு :—** 2 - 5 கிலோ ஒரு எக்டருக்கு. விதைக்கும்முன் சுமார் 10 மடங்கு சிறுமணலுடன் விதையைக் கலந்து விதைத்தல் நன்று.

**உர அளவு :—** ஒரு எக்டருக்கு 25 டன் தொழு உரம் இட்டு நன்கு உழுது, கடைசி உழவில் 125 கிலோ அமோனியம் சல்பேட் (அ) 60 கிலோ யூரியா, 300 கிலோ சூப்பர்பாஸ்பேட், 60 கிலோ முரியேட் ஆப் பொட்டாஷ் இட்டு நன்கு உழுதல் வேண்டும்.

**பின் சேர்த்தி :—** களைகள் தோன்றுவதைப்பொருத்து ஒன்று (அ) இரண்டு களை ( கை களை ) கொடுத்தல் நன்று.

**நீர் பாய்ச்சல் :—** மண்ணிற்கு ஏற்றவாறு 5 முதல் 7 நாட்கட்கு ஒரு முறை நீர்பாய்ச்சலாம்,

**அறுவடை :—** முளைக்கீரையாக எடுப்பதாயின் விதைத்த 15 முதல் 20 நாட்களில் எடுக்கலாம். தண்டுக்கீரையாயின் 40 முதல் 50 நாட்களில் எடுக்கலாம்.

பயிர்ப் பாதுகாப்பு :

**மகசூல் :—** எக்டருக்கு 6000 கிலோ கீரை கிடைக்கும். விதைத்ததும் விதைகளை எறும்பு முதலியவைகளினின்றுகாக்க பி. எச். சி. 10/ மருந்தை எக்டருக்கு 25 கிலோ விதம் தூவுக.

**மூக்குவண்டு :—** கீரைத்தண்டைத்துளைக்கும் மூக்குவண்டைத் (Weevil) தடுக்க மாலதியான் 0. 5 % தெளிக்கலாம். ஒரு லிட்டர் நீரில் 2 மி. லிட்டர் மருந்து கலந்து தெளித்தல்வேண்டும்.

**இலைப்புள்ளி நோய் :—** இலைப்புள்ளி முதலிய நோயைத் தடுப்பதற்கு டைதேன் இஸட்-78 மருந்தை 0 15% கலவையாகத் தெளிக்க வேண்டும். (ஒரு கிராம் மருந்தை ½ நீரில் கலத்தல்).

---

## அன்னை அருள்மாலை

திருமுறை இன்னிசைவாணர்

**வேலூர், திரு. க. சொக்கலிங்க ஓதுவார்.**

நேசங் கொள்மண்ணிப் படிக்கரை வாழ்கின்ற
　நிமலி அமிர்தகரவல்லி
நிகரிலா ஓமாம் புலியூரில் பூங்கொடி
　நீண்டகாளுட் டுமுள்ளூர்
பேசுங் காளுர்குழலி திருநாரை யூரினைப்
　பிரியாத்திரி புரசுந்தரி
பெரியோர்கள் புகழ்கடம் பூர்சோதி மின்னம்மை
　பீடுடைய பந்தணைநல்லூர்
வாசங்கொள் காம்பன தோளியம்மை மண்ணில்
　வளம்பெறும் கஞ்சனூரில்
வந்தகற்பக நாயகிகோடி காவடி
　வாம்பிகைமங் கலக்குடியிலே
பாசமதகற்றிடும் மங்களநாயகி
　பண்ணிலுறு பெண்ணமுதமே
பஞ்சின்மெல் லடியிணையைத் தஞ்சம்அடைந்தென்றும்
　பணிவேற் கருள் அன்னையே, (4)

# பல்கேரிய மொழி - சில படிப்பினைகள்

டாக்டர் ந. சஞ்சீவி - பேராசிரியை. கிருஷ்ணாசஞ்சீவி

இருபதாம் நூற்றாண்டுத் தமிழின் இமய வெற்றியாய் விளங்கும் கலைக்களஞ்சியம் தரும் குறிப்புகள் வருமாறு:

1. ஆதி பல்கேரிய மொழி என்பது யூரல் - ஆல்ட்டேயிக் மொழியாகும். அந்த மொழி பேசிய மக்கள் ஆறும் நூற்றாண்டில் வால்கா நதிப் பகுதியிலிருந்து பல்கேரியாவுக்கு வந்து சேர்ந்தபின், அங்கிருந்த ஸ்வாவியர் (Slavs) மொழியாக ஆக்கிக் கொண்டனர். **ஆதியில் பேசிய யூரல் - ஆல்ட்டேயிக் மொழியின் குறிகள் மிகச் சிலவே இப்போது பல்கேரிய மொழியில் காணப்படும்.**

2. ஒன்பதாம் நூற்றாண்டில்தான் பல்கேரிய மொழி எழுத்து வடிவம் பெற்றது. சிரில், மெதோடியஸ் ஆகிய கிறிஸ்தவப் பாதிரிமார் பல்கேரிய மக்களிடம் **கிறிஸ்தவப் பிரசாரம்** செய்ய வந்தனர். அவர்கள் **அதற்காகப்** பல்கேரிய மொழிக்கு நெடுங்கணக்கு அமைத்தனர். அது கிளாகோலிட்டிக் (Glagolitic) என்று பெயர் பெறும். அதுவரை பல்கேரிய மக்கள் **கிரேக்க எழுத்தையே** பயன்படுத்தி வந்தனர்.

* * * * *

9ஆம் நூற்றாண்டின் இறுதியிலும், 10ஆம் நூற்றாண்டின் துவக்கத்திலும் பல்கேரிய இலக்கியம் செழித்து வளரலாயிற்று. இது பல்கேரிய மத்திய கால நாகரீகத்தின் பொற்காலம்என்று கூறப்பெறும்.

* * * * *

10ஆம் நூற்றாண்டில் எழுந்த இலக்கியங்கள் ஸ்வாங்மொழியைப் பரவச் செய்தன. பல்கேரிய மக்களிடையே ஒற்றுமை உண்டாக்கின. ஆதி பல்கேரியர், ஸ்லாவியர் இவர்களிடையே இருந்த வேற்றுமைகளை நீக்கின. ஸ்லாவிய நாகரீகத்தை வளர்த்தன.

துருக்கியர் பல்கேரியாமீது 14-ஆம் நூற்றாண்டில் படையெடுத்து வந்து நாட்டைக் கைப்பற்றி 500 ஆண்டுக் காலம் அரசு புரிந்தனர். பல்கேரிய மக்கள் ஐந்நூறாண்டுகள் அடிமைகளாக வாழ்ந்தபோதிலும் தங்கள் பழைய கவிதைகளைப் பாதுகாத்ததுடன் புதிய கவிதைகளும் யாத்தனர். அக்கவிதைகளில் தங்கள் பண்டைப் பெருமைகளை வருணித்தனர். தங்கள் வீரர்களைப் புகழ்ந்தனர்.

18-ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில், பைசி கிலெண்டார்ஸ்க்கி (Paissi Khilendarsky) 1722 என்னும் துறவியார், 1762ல் ஸ்லாவ் - பல்கேரிய வரலாறு என்ற நூலை இயற்றினர். இதுவே பல்கேரிய மக்கள் புத்துயிர் பெறுவதன் முதல் கட்டமாகும். மக்கள் அடிமைகளாகயிருந்தனர். கல்வி கிடையாது. தாய்மொழியை மறந்தனர்- நாட்டுப் பற்றை இழந்திருந்தனர். இத்தகைய மக்களைத் துறவியார் தட்டி எழுப்பினர். இவருடைய நூலே பல்கேரிய இலக்கியத்தின் மறுமலர்ச்சித் தொடக்கமாகும்.

இவருடைய முதல் மாணவரான சாப்ரோனிய விரசான்ஸ்க்கி (Safroniyi Vrachansky) என்பவர் 1803 - 5 ல் தமது சுயவாழ்க்கை வரலாறு எழுதினர். இது பொதுமக்கள் எளிதில் அறியக்கூடிய நடையில் இயன்றது. இதில் அவர் பல்கேரிய மக்களுடைய வறுமை நிலை, அடிமை நிலை இரண்டையும் தெளிவாக எழுதினர். இவர் எழுதிய உபதேசச் சொற்பொழிவுகளே முதல் முதல் (1806) பல்கேரிய மொழியில் அச்சிடப்பட்ட நூலாகும். இவர் பல்கேரிய இலக்கியவளர்ச்சிக்கு அடிகோலியவர்.

* * * * *

நாட்டுப் புரட்சிக் கொள்கைக்கு வித்திட்டவர் என்று கருதப் பெறும் ஜார்ஜ் ராக்காவ்ஸ்க்கி (George Rakeusy 1821 – 67) என்பவர் எழுதிய மலைப்பிரயாணி (Mountain Traveler) என்னும் காவியம் மக்கள் துருக்கியராட்சியைக் கவிழ்ப்பதற்காக ஆயுதப்போர் தொடங்க வேண்டும் என்று கூறியது.

பல்கேரியக் கவிதை, கருத்துக்களிலும் நடையிலும் சுவையிலும் உச்சநிலை அடைந்தது. உற்றிஸ்ட்டோ போட்டவ் (Hristo Botev 1848 - 76) என்னும் கவிஞருடைய பாடல்களிலேயே, இவருடைய ஹாட்ஜி டிமிட்டர் (Hadji dimiter) என்னும் சுதந்திரகீதம் உலகமகா இலக்கியங்களுள் ஒன்ருக மதிக்கத் தகுந்தது. இவர் நாட்டு விடுதலைக்காக நடந்த யுத்தத்தில் போர்க்களத்தில் இறந்தார்.

* * * * *

பல்கேரியாவில் ஆண் புலவர்களுடைய நூல்களைவிடப் பெண் புலவர்களுடைய நூல்களே சிறப்புற்றவை என்பது குறிப்பிடத் தக்கது.

பல்கேரியா பொதுவுடைமை நாடாகிய பின்னர் எழுத்தாளர்கள் பெரும்பாலும் சோஷலிசக் கொள்கைக்கு ஆதரவாகவே நூல்கள் இயற்றி வருகின்றனர்.

தகவல் : கலைக்களஞ்சியம்

# குமரகுருபரரின் வியத்தகு வேண்டுகோள்!

தருமையாதீனத் தமிழ்ப்புலவர்,

திரு. ந. ரா. முருகவேள் M, A., M. O. L.,

**முன்னுரை :**

இறைவன், வேண்டுவார் வேண்டுவன எல்லாம் ஈந்தருள்பவன்; இனிய தனது அடியவர்களுக்கு எதனையும் மறுதும், இல்லையென்னுதும் வரையறை இன்றியும், வாரி வழங்கும் அருள் வள்ளலாக அவன் விளங்குகின்ருன் ! " ஆசை தீரக் கொடுப்பார், அலங்கல் விடைமேல் வருவார் " எனத் திருஞானசம்பந்தர், இறைவனின் எல்லையில்லாத வள்ளன்மையைப் புகழ்ந்து பாடியிருக்கின்ருர்.

**வேண்டுதல் :**

அன்பர்களும் அடியவர்களும் ஆகிய அனைவரும், இறைவனிடம் சென்று தத்தம் குறைகளை முறையிட்டுத் தாம் தாம் விரும்புவன பல வற்றையும் ஈந்தருளுமாறு, வேண்டிக் கொள்வர். எல்லாச் சமயங் களிலும் வேண்டுதல் - பிரார்த்தனை - நேர்த்திக்கடன் என்பது உண்டு. மக்கள் அனைவரும் ஏதேனும் ஒரு நன்மையை அடைய விரும்பியே, பெரும்பாலும் இறைவனை வணங்கும் வழக்கமுடையவராகக் காணப் படுகின்றனர். " மதிவேண்டும் - நின் கருணை நிதிவேண்டும் - நோயற்ற வாழ்வில் நான் வாழ வேண்டும் " என்றெல்லாம், சிறந்த யோகிகளும் ஞானிகளும்கூட, ஒருவகையில் இறைவனை வேண்டுதல் செய்துகொண்டு வழிபட்டு வந்துள்ளனர்.

**பரிபாடல் :**

திருப்பரங்குன்றத்திலுள்ள முருகனைப் பெருந்திரளான மக்கள் வந்து வழிபடும் காட்சியை, இற்றைக்குச் சுமார் இரண்டாயிரம் ஆண்டுகட்கு முற்பட்ட பரிபாடல் என்னும் சங்க நூல் விவரிக் கின்றது. அவர்களுட் சிலர், " முருகனைத் தங்கள் கனவுகள் நனவாதல் வேண்டும் எனப் பணிகின்றனர்; ஒரு சிலர், தமக்கு மக்கட்பேறு கிடைத்தல் வேண்டும் எனத் தொழுகின்றனர்; மற்றும் சிலர் தங்க

ளுக்கு நிரம்பப் பொருட்செல்வம் சேர்தல் வேண்டும் என்று விரும்பி வணங்குகின்றனர்! வேறு சிலர், தாம் மேற்கொண்டு செல்லும் போர் முயற்சிகளில் பகைவரைக் கொன்று வெற்றி அடைதல், குறித்து, இறைஞ்சி வேண்டிக் கொள்கின்றனர்'' என, ஆசிரியர் **நல்லந்துவனுர்** என்னும் புலவர், பாடுகின்ருர். இதனல், இறைவன் பால் தாம் தாம் விரும்பும் அனைத்துப் பொருள்களையும் வேண்டிக் கொள்ளுதல், மன்பதைக்கு இயல்பென்பது பெறப்படும்.

இம்முறையினை ஒட்டி, இறைவன்பால் குமரகுருபரர் ஒரு வியத்தகு வேண்டுகோளைச்செய்து கொள்கின்ருர். பிறரெல்லாம் இறைவன்பால் "எமக்கு இது வேண்டும் - அதுவேண்டும்" என்று தம் இன்ப வாழ்க்கைக்குத் துணைபுரிவன பலவற்றையும் ஒருங்கு தொகுத்து நிரந்து இனிது கூறி வரம் தர வேண்டுவர். ஆனல் நம் குமரகுருபரரோ, வேறு எவரும் செய்ய முற்படாத புதிய முறையில், இறைவன்பால் ஒரு தனிச்சிறப்பான வேண்டுதல் செய்துகொள் கின்ருர்.

**சிதம்பர மும்மணிக்கோவை :**

"சோலைகள் பலவற்ருல் சூழப்பெற்ற தில்லை மாநகரில் எழுந் தருளி வாழும் கூத்தப் பெருமானே! இங்கு அடியேனுக்கு ஒரே ஒரு சிறிய வரத்தை அளித்தருளல் வேண்டும்''.

"தேவர்களுக்கெல்லாம் தலைவனுகிய இந்திரனின் பெறுதற்கரிய வாழ்க்கையும், சங்கநிதி பதுமநிதி என்னும் இருபெரும் நிதிகளை உடைய குபேரனின் ஒப்பற்ற பெருஞ் செல்வமும், ஐந்து மலரம்புகளை உடைய மன்மதனின் அழியாத பேரழகும், ஒருங்கே கிடைத்தாலும் அவற்றைச் சிறிதும் விரும்பாமல் அஞ்சிக்கலக்கமுற்று விலக்கி, கையில் பிச்சையையே ஏற்று உண்டு வாழ்கின்ற உத்தம யோகிகளுக்கு, அவர்கள் எவ்வாறு இருந்தாலும் இடையூறு சிறிதும் நேராது''.

"ஆனல் யானே, வாதத் தொடர்புடைய புளிப்புச் சுவையை யும், பித்தத் தொடர்புடைய கைப்புச் சுவையையும், கோழைத் தொடர்புடைய இனிப்புச் சுவையையும், மற்றுமுள்ள சுவைகளையும் விரும்பி, அவற்றிலேயே அழுந்திப் புதிது புதிதாக உண்டு, கழி பெரும் காமத்தில் மூழ்கி, முழுவதும் பாவமும் பழியுமே மேவி நிற்கும் இயல்புடையவன். அதனைத் தவிர ஞானச் செம்பொருளை உணர்ந்து, சிற்றறிவு நீங்கி, ஐம்புலன்களை அடக்கி, அறத்தின் வழிநின்று, தீ நெறி விலக்கி, நன்னெறியிற் செல்லுதற்குரிய அறிவுத் திறன், சிறிதும் எனக்கு இல்லை''.

**வேண்டுகோள் :**

" ஆதலின், மிகுந்த பெருங் குளிரால் யான் வருந்தும்போது, அழுக்கடைந்து கிழிந்த கந்தைகள் பலவற்றை ஒருங்கே சேர்த்துத் தைத்த ஒரு துணியைத் தவிர, வேறு துணி ஒன்றும் எனக்குக் கிடைக்காமல் இருப்பதாக; பாழடைந்த வீட்டின் வாயிற்புறத்துத் திண்ணையல்லாமல், படுப்பதற்கு எனக்கு வேறு இடம் எதுவும் இல்லாமற் போவதாக; எனது கடுமையான பசியைத் தணித்துக் கொள்வதற்கு, உப்பில்லாமற் காய்ச்சிய புல்லரிசிக்கூழ் தவிர, வாய் விட்டு அழுது புலம்பினாலும், வேறு உணவு எதுவும், இரக்கப்பட்டேனும், எனக்குக் கொடுப்பவர்கள் இல்லையாகுக!"

ஒழுக்கம் நிறைந்த விழுப்பெருங் கேள்வியை உடைய, மெய்த் தவத்தவர்களின் திருக்கூட்டத்தில் யான் நாள்தோறும் கலந்திருப் பேன் ஆகுக; இவ்வாறு என் உடல் நீங்கும் வரையில் எனக்கு நீ உதவுதல் வேண்டும். அது மட்டுமன்று: நான் எவ்வளவுதான் நின்னை இரந்து வேண்டிக் கொண்டாலும் நின்னுடைய சிறந்த திருவடியைத் தவிர, வேறு எதனையும் எனக்கு நீ கொடுக்காதிருத்தல் வேண்டும்!"

" மல்லலம் பொழில்சூழ் தில்லை வாண!
வரம்ஒன்று இங்குஎனக்கு அருளல் வேண்டும்!
அதுவே,
பெருங்குளிர்க்கு உடைந்த காலைக் கருந்துணி
பலதொகுத்து இசைத்த ஒருதுணி அல்லது
பிறிதொன்று கிடையாது ஆக; வறுமனைக்
கடைப்புறத் திண்ணை அல்லது கிடக்கைக்கு
இடம்பிறிது இல்லை ஆக; கடும்பசிக்கு
உப்புஇன்று அட்ட புற்கைஊண் அல்லது,
மற்றோர் உண்டி வாய்விட்டு அரற்றினும்
ஈகுநர் இல்லை ஆக; நாள் நாளும்
ஒழுக்கம் நிறைந்த விழுப்பெருங் கேள்வி
மெய்த்தவர் குழாத்தொடும் வைக; இத்திறம்
உடல்நீங்கு அளவும் உதவிக், கடவுள்நின்
பெரும்பதம் அன்றி யான் பிறிதொன்று
இரந்தனன் வேண்டினும், ஈந்திடா ததுவே!"

— சிதம்பர மும்மணிக்கோவை (8)

மிகச்சிறந்த பேரறிஞரும் கவிஞரும் தவஞானச் செல்வருமாகிய குமரகுருபர அடிகளார், இங்ஙனம் உலக மக்களின் நிலைக்கு மாறான

முறையில் மிகவும் வியத்தகு நிலையில், இறைவன்பால் விண்ணப்பஞ் செய்து வரம் வேண்டிக்கொண்டிருப்பதன் நுட்பம், சிந்தித்து உணர் தற்குரிய சிறப்புடையது.

**வறுமையின் பெருமை :**

செல்வ மிகுதியால் நேரும் **தீங்குகள்** * பலவற்றையும் ஓர்ந்து உணர்ந்தே ஞானிகள் அனைவரும் செல்வத்தை வெறுத்து ஒதுக்கி, வறுமையைத் தேடித் தழுவி மகிழ்ந்து வாழ முற்பட்டிருக்கின்றனர். புத்தர் - இயேசு - முகம்மது - கபீர் - நாணக் - சைதன்யர் - சங்கரர் - தயானந்தர் - இராமகிருஷ்ணர் போன்ற ஞானிகள் பலரும், வறுமையையே பெரிதும் விரும்பிப் போற்றி மகிழ்ந்து வாழ்ந்துள்ளனர். ‡

**முடிவுரை :**

இந்நுட்பம் அறிந்த மெய்யுணர்விஞலேயே போலும், நம் குமர குருபர அடிகளார், " யான் போர்த்திக்கொள்ள ஒரு கிழிந்த துணியை

---

* Charles Schwab, president of the world's largest independent steel Company lived the last years of his life on borrowed money and died penniless. Arthur Cutten, greatest of the wheat speculators, died abroad insolvent. Richard whitney, president of New York Stock Exchange, served a term in Singsing Penitentiary. Albert Paul the cabinet member, was pardoned from prison so that he could die at home. Tesse Livermore the "bear" of wall Streat; Leon Frazer, president of the bank of international settlements, and Ivar Kreuger, head of the world's largest monapoly, all committed suicide '

— Billy Graham

‡ "Rome suffered a moral fall when it attained high material affluence. So did Egypt and perhaps most countries of which we have any historical record. The descendants and kinsmen of the royal and divine Krishna too fell, when they were rolling in riches ' Jesus Mohammed, Buddha Nanak, kabir, Chaitanya. Dayanand, Ramakrishna were men who exercised an immense influence over and moulded the character of thousands of men. The world is the richer for their having lived in it. And they were all men who deliberately embraced poverty as their lot "

— Mahatma Gandhi.

மட்டுமே கொடு; படுத்துக்கொள்ளப் பாழடைந்த வீட்டின் வாயிற் புறத்துத் திண்ணையையே காட்டு; குடிப்பதற்கு உப்பில்லாத புல்லரிசிக் கூழை மட்டுமே அளி; உன் திருவடியைத் தவிர எனக்கு வேறு எதுவும் கொடுக்காதே" என வேண்டிக்கொள்கின்றார்! உன்னித்து உணருங்கால் உண்மையில், இஃது ஒரு "வியத்தகு வேண்டுகோள்" தான், என்பதில் ஐயம் உண்டோ?

திமிரம் அகற்றும் சிறப்புமிகு தெய்வக் கவிஞர்! திருச்செந்தூர்
தமது முருகன் அருள்பெற்ற ஞானச் செல்வர்! தவமுனிவர்!
அமிழ்தின் இனிய நூல்கள்பல அளித்த அறிஞர் காசிவரை
தமிழை வளர்த்த குமரகுரு பரநற் சான்றோர், தாள்போற்றி.

— ந. ரா. முருகவேள்.

---

# அன்னை அருள்மாலை

திருமுறை இன்னிசைவாணர்

**வேளூர், திரு. க. சொக்கலிங்க ஓதுவார்.**

எத்திசையுந்தொழுபனந் தாள்பெரியநாயகி
ஈடிலா ஆப்பாடியில்
ஏற்றமுறும்பெரியநா யகியம்மை சேய்ஞ்ஞலூர்
இசைந்தசகி தேவியம்மை
தித்திக்கும்தேவன் குடிஅருமருந்தம்மை
தேவர்தொழும் வியலூரினில்
சேரும்சௌந்தர நாயகிகொட்டையூர்த்
தேவிபந் தாடும்அம்மை
முத்திதரும்இன்னம்பர் கொந்தார்பூங்குழலம்மை
முன்னிற்கும் புறம்பயத்தே
முடிவிலாக்கரும்படுசொல் லம்மைவிசயமங்கை
முதிரா மங்கைநாயகி
பத்திதருவைகாவூர் வளைக்கைநாயகியம்மை
பண்ணிலுறு பெண்ணமுதமே
பஞ்சின்மெல்லடியிணையைத் தஞ்சம் அடைந்தென்றும்
பணிவேற் கருள் அன்னையே. (5)

உ
சிவமயம்

திருக்கயிலாய பரம்பரைத் தருமையாதீனத்திற்குச் சொந்தமான
திருக்கடவூர்
அருள்மிகு. அபிராமி அம்மை உடனுகிய
அருள்மிகு. அமிர்தகடேசுவரசுவாமி திருக்கோயில்

# தூப தீப அறக்கட்டளை வேண்டுகோள்

திருச்சிற்றம்பலம்

“ பெரும்புலர் காலை மூழ்கிப் பித்தர்க்குப் பத்தராகி
அரும்பொடு மலர்கள் கொண்டாங்கு ஆர்வத்தை உள்ளே வைத்து
**விரும்பிநல் விளக்குத் தூபம்** விதியினால் இடவல் லார்க்குக்
கரும்பினில் கட்டிபோல்வார் கடவூர் வீரட்டனாரே ” — **அப்பர்.**

திருச்சிற்றம்பலம்

காலையில் எழுந்து நீராடிச் சிவபெருமான் திருவடிக்கு அன்பு பூண்டு அரும்புகளையும் மலர்களையும் அவன் திருவடிகளில் தூவி விருப்பத்தோடு திருவிளக்கேற்றித் தூபம் இட்டு வழிபடுவார்க்குக் கடவூர் இறைவன் கரும்பினில் கட்டிபோல இனியவனாய் அருள் புரிவான் என்பது இப்பாடலின் பொருளாகும்.

## தூப தீபங்கள் இடுவதன் பயன் :

எல்லாம்வல்ல இறைவன் ஒளிமயமானவன். சிவபரம்பொருளைச் ‘ சோதியே சுடரே சூழ்ஒளி விளக்கே ’ எனக் குறிப்பர் மணிவாசகர். அறிவும் ஒளிமயமானது. அறிவை வடமொழியில் ‘ஞானம்’ என்பர். இறைவனை அறியும் ஞானம் உடையவர்களே ஞானிகள் எனப் படுவர். ‘ இத்தகு ஞானியர் திருவுள்ளத்தில் இறைவன் வீற்றிருந் தருளுகின்றான் ’ எனத் தேவாரத்திருமுறைகள் அருளிச்செய்கின்றன. நாமும் மெய்யறிவுபெற்றுத் திகழ்ந்தால், ஞானியர் உள்ளத்தில் எழுந் தருளியிருப்பதைப்போல நமது உள்ளத்திலும் சிவபெருமான் எழுந் தருளியிருந்து அருள்பாலிப்பான். இருளைப் புற இருள் என்றும், அக இருள் என்றும் இரண்டாகக் கூறுவர். நாம் ஏற்றும் விளக்குகள் புற இருளைப் போக்கி ஒளியினை நல்குவன. தூய ஞானமே நம் உள்ளத் திருக்கும் அக இருளைப் போக்கி ஒளியூட்டவல்லது.

"விளக்கினார் பெற்ற இன்பம் மெழுக்கினால் பதிற்றியாகும்
துளக்கில் நன்மலர் தொடுத்தால் தூயவிண் ணேறலாகும்
**விளக்கிட்டார் பேறுசொல்லின் மெய்ந்நெறி ஞானமாகும்**
அளப்பில கீதம் சொன்னார்க்கு அடிகள்தாம் அருளுமாறே"

என்கின்றார் அப்பர்.

இறைவன் சந்நிதியில் இருளை அகற்றும் விளக்கேற்றினால் நம் அறிவுவிளக்கம் பெறுவதோடு, நமது குடும்பமும், சமுதாயமும், நாடும் விளக்கம்பெறும். 'சிவபெருமான் திருக்கோயிலில் நாடோறும் திருவிளக்கு ஏற்றுவார்க்கு எல்லாச்செல்வங்களும் தாமே தேடிவரும்' என்பது நமது முன்னோர்கள் கண்ட அனுபவ உண்மையாகும். இதனையே அப்பர்பெருமான் தமது தேவாரத்துள் 'விளக்கிட்டார் பேறு சொல்லின் மெய்ந்நெறி ஞானமாகும்' எனக் குறித்தருளி யுள்ளார். திருவிளக்கிட்டு இறையருளைப்பெற்ற 'கணம்புல்ல நாயனாரின்' அருள் வரலாறு பெரியபுராணத்துள் விரிவாகக் கூறப் பெற்றுள்ளது. இறைவன் சந்நிதியில் தூபம் இட்டு வழிபட்டால் நம் பாவங்கள் அகலும். இத்தலத்தில் குங்குலியக்கலய நாயனார் குங்குலியத்தூபம் இட்டு வழிபட்டு இறைவனருளால் எல்லாச்செல்வங் களையும் பெற்ற வரலாற்றைப் பெரியபுராணத்துள் காணலாம்.

**காலபயம் நீக்கும் கடவூர்:**

சிவபெருமான் அன்பர்களுக்காகப் பெருவீரங்காட்டியருளிய தலங்களை எட்டாகக் குறிப்பர். இவற்றை அட்ட வீரட்டத் தலம் என்பர். அட்ட வீரட்டத் தலங்களுள் ஒன்று, திருத்தருமையாதீன அருளாட்சியில் திகழும் திருக்கடவூர். இது தன்னை அன்புடன் பூசித்த அந்தணச் சிறுவராகிய மார்க்கண்டேயருக்காகப் பெருமான் காலனைக் காய்ந்தருளிய பெருமைமிக்கதலம். தேவர்களும் அசுரர்களும் பாற்கடலைக் கடைந்து பெற்ற தேவாமிர்தக்குடமே இத்தலத்தில் சிவலிங்கத் திருமேனியாக அமைந்து அமிர்தகடேசுவரர் என்ற திருநாமம்பெற்றது. உலகினையெல்லாம் தம் அருட்புனலால் நீராட்டிக் காத்தருளும் அன்னை, அழகுக்கு ஒருவரும் ஒவ்வாத வல்லியாக அபிராமி என்ற திருநாமத்தோடு இத்தலத்தில் எழுந்தருளியிருந்து அருள்பாலிக்கிறாள். இத்தலத்தை அன்போடு வழிபடுவார் காலபயம் நீங்கி நீண்ட ஆயுளைப்பெற்று வாழ்தல் உலகறிந்த செய்தியாகும்.

**அற்புதங்கள் நிகழ்ந்த அருள்தலம்:**

திருஞானசம்பந்தர், திருநாவுக்கரசர், சுந்தரமூர்த்தி சுவாமிகள் ஆகிய தேவாரம் அருளிய மூவர்களாலும் பாடப்பெற்ற சிறப்புமிக்க

திருத்தலம் திருக்கடவூர். அறுபத்துமூன்று நாயன்மார்களில் குங்குலியக்கலய நாயனரும், காரிநாயனரும் அவதரித்த அருள் தலம் இது. இத்தலத்து இறைவனுக்கு மனைவியின் மாங்கல்யத்தைவிற்று, குங்குலியம் வாங்கித் தூபம் இட்டு இறையருளைப்பெற்ற குங்குலியக் கலய நாயனரின் அருள் வரலாறு திருக்கடவூர் இறைவனது அளவிலாக் கருணையை விளக்குவது. தம் திருக்காதுகளில் இருந்த குழையினை வானமண்டலத்தில் வீசி எறிந்து அமாவாசைநாளைப் பௌர்ணமியாக மாற்றிக் காட்டிய அன்னை அபிராமியின் பேரருளைப் பெற்ற அபிராமிபட்டர் வாழ்வும் வரலாறும் இணைந்தபெருமை திருக் கடவூருக்கு உண்டு. இத்தகுபெருமைமிக்க இத்தலத்தில் நீண்ட ஆயுளையும், நிறைந்த செல்வத்தையும் பெற விரும்பும் அன்பர்கள் ஆயுள்ஹோமம், சஷ்டியப்தபூர்த்தி முதலியவற்றை நிகழ்த்திப் பெரும் பேறுகள் பெற்றுவருகின்றனர். இத்தலத்து இறைவன் தம் அன்பர் களுக்கு அம்மைவாயிலாகத் தனத்தையும், கல்வியையும், தளர்வறியா மனத்தையும், தெய்வவடிவையும், நெஞ்சில் வஞ்சமில்லா இனத்தை யும், நல்லன எல்லாவற்றையும் தவருது வழங்கியருளுகின்ருன்.

இத்தகு சிறப்புக்களை உடைய திருக்கடவூரில் அமைக்கப்பட் டுள்ள தூப தீப அறக்கட்டளைப் பணியில் அன்பர்கள் யாவரும் பங்கு பற்றி உய்யவேண்டும் என்று திருவுள்ளம்பற்றிய தருமையாதீனம் 26 ஆவது குருமகாசந்நிதானம் **ஸ்ரீலஸ்ரீ சண்முகதேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள்** வைத்தீஸ்வரன்கோயிலில் திருவிளக்கு அறக் கட்டளை நிறுவியருளியதுபோலவே இதுபோது திருக்கடவூரிலும் இவ்வறக்கட்டளையை அமைத்து அன்பர்களைப் பங்கேற்று உய்ய அருள்பாலித்திருக்கின்ருர்கள். இவ்வறக்கட்டளை **ஸ்ரீலஸ்ரீ** குருமகா சந்நிதானம் அவர்களின் ஜன்மநக்ஷத்திரத் திருநாளில் தொடங்கப் பெற்றுள்ளது.

## அறக்கட்டளை அமைப்பு :

அன்பர்கள் தங்கள் பிறந்தநாள், திருமணநாள் அல்லது தங்கள் முன்னேர்களின் நினைவுநாள் போன்ற அவர்கள் விரும்பும் யாதானும் ஒருநாளில், இத்திருக்கோயிலில் உள்ள எல்லாச் சந்நிதிகளிலும் தூப தீபம் இடுமாறு இவ்வறக்கட்டளையினை அமைத்துக்கொள்ளலாம். இவ் அறக்கட்டளையில் பங்குகொண்டு, தூப தீபம் இட்டு நலம்பெற விரும்புவோர் **ரூபாய் அறுநூற்றென்றினை (ரூ. 601—00)** இத் தேவஸ்தானத்தில் நேரிலோ அல்லது காசோலைவாயிலாக அஞ்சல் வழியோ செலுத்தி இரசீது பெற்றுக்கொள்ளலாம். இத்தொகையினை வைப்புநிதியாகக்கொண்டு, ஆண்டுதோறும் அதில்வரும் வருவாயில், காணிக்கை செலுத்துவோர் குறிப்பிடும்நாளில் எல்லாச்சந்நிதிகளிலும்

தூப தீபம் இட்டும், கள்ளவாரணப்பிள்ளையார், சுவாமி, அம்பாள், காலசம்காரமூர்த்திக்கு அர்ச்சனைசெய்வித்தும் பிரசாதம் நேரிலோ அல்லது அஞ்சலிலோ அனுப்பிவைக்கப்பெறும்.

**வேண்டுகோள் :**

இவ்வாலய பக்தர்கள், தமிழகத்திலும் வேறு மாநிலங்களிலும், கடல்கடந்த நாடுகளிலும் வாழ்ந்துவருகின்றனர். எல்லா அன்பர்களும் திருக்கோயிலில் தூப தீபம் இடுவதற்கு அறக் கட்டளை ஏற்படுத்தி மெய்ஞ்ஞானத்தினையும், நீண்ட ஆயுளையும் பெற்றுச் சிறக்க அன்புடன் வேண்டுகின்றோம். **திருக்கடவூர் தூப தீப அறக் கட்டளைக்கு** உடன் ரூபாய் அறுநூற்றுஒன்றினைச்செலுத்தித் திருவருள் பெற்று விடும், நாடும் சிறக்க அன்பர்கள் முன்வருவார்களாக.

**வெளிநின்ற நின்திரு மேனியைப் பார்த்து என் விழியும் நெஞ்சும்**
**களிநின்ற வெள்ளம் கரைகண்ட தில்லை கருத்தினுள்ளே**
**தெளிநின்ற ஞானம் திகழ்கின்ற தென்ன திருவுளமோ**
**ஒளிநின்ற கோணங்கள் ஒன்பதும் மேவி உறைபவளே.**

**ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானத்தின்,**
உத்தரவுப்படி

அருள்மிகு. அமிர்தகடேசுவரர் தேவஸ்தானம், திருக்கடவூர்.
7—2—1978.

**N. P. சீனிவாச ஐயங்கார்,**
சூப்பரின்டெண்டெண்ட்.

---

தொகை அனுப்பவேண்டிய முகவரி :—

**பொருளாளர்,**

**அருள்மிகு. அமிர்தகடேசுவர சுவாமி தேவஸ்தானம்**
**திருக்கடவூர் (அஞ்சல்) 609 311**
மாயூரம் வட்டம், தஞ்சை மாவட்டம்.

உ

சிவமயம்

# ஆயில்யத்திருநாள் ஆலய வழிபாடு

"கோயில் இல்லா ஊரில் குடியிருக்க வேண்டாம்" என்பதும் "ஆலயம் தொழுவது சாலவும் நன்று" என்பதும் நம்நாட்டில் வழங்கும் பழமொழிகள். மக்களைத் திருக்கோயில் வழிபாட்டில் ஈடுபடுத்தி, சைவ - சமயப் பெருமைகளை அறியச் செய்து உய்விக்க வேண்டும் என்ற பெருங்கருணையால் தருமை யாதீனம் 26 - ஆவது குருமகாசந்நிதானம் **ஸ்ரீலஸ்ரீ சண்முக தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள்** தமது குருமூர்த்திகள் காட்டியருளிய வழியிலேயே தமது ஜன்ம நட்சத்திரமாகிய ஆயில்யத் திருநாளில் பாடல் பெற்ற தலங்கள் தோறும் முறையான வழிபாட்டிற்கு வழிகாட்டி வருகிறார்கள். காவிரிவடகரைத் தலவழிபாடு திருஈங்கோய்மலை வழிபாட்டோடு நிறைவுற்றது. இம்மாதம் முதல் காவிரித் தென்கரைத் தலவழிபாடு தொடங்கி நிகழும். உழவாரப்பணி, விசேட அபிடேக ஆராதனைகள் தலத் திருப்பதிகங்களை அச்சிட்டு ஓதி வழங்குதல், சமயப்பிரசாரம் முதலியன ஆயில்யத் திருநாள் வழிபாட்டின் அங்கங்களாகும்.

நிகழும் பிங்கள ஆண்டு மாசித்திங்கள் 9-ஆம்நாள் (21—2—78) செவ்வாய்க்கிழமை யன்று மாத ஜன்ம நட்சத்திர மாதலின் **திருவாட்போக்கி** அருள்மிகு. சுரும்பார் குழலி உடனுகிய இரத்தினகிரிநாதர் திருக்கோயிலில் உச்சிக்காலத்தில் அபிஷேக ஆராதனைகளுடன் வழிபாடும்நடைபெறும். 22-2-78 புதன்கிழமை யன்று **திருகடம்பந்துறை** அருள்மிகு. முற்றிலா முலையம்மை உடனுகிய கடம்பவனநாதர் திருக்கோயிலில் கால சந்தியில் அபிஷேக ஆராதனைகளும் வழிபாடும் நடைபெறும். **சமயச் சொற்பொழிவுகளும் நிகழும்**

**அனைவரும் வருக! வழிபட்டு உய்க! அரன் அருள் பெறுக!**

# செய்திகள்

தருமையாதீனம்

## ஸ்ரீ குருஞானசம்பந்தர் உயர்நிலைப்பள்ளிக் கட்டிடத் திறப்பு விழா

தருமை யாதீனத்தில் ஆலய பூசகர் பயிற்சிக்காக வேதசிவாகம பாடசாலையும், திருமுறைப் பயிற்சிக்காக தேவாரப்பாடசாலையும், தருமையாதீனத்தைச் சார்ந்துள்ள பகுதிகளில் வாழும் மக்களின் கல்வி அறிவு வளர்ச்சிக்காக **ஆதீன ஸ்தாபகர் ஸ்ரீ குருஞானசம்பந்தர்** திருப்பெயரால் தொடக்கப்பள்ளி ஒன்றும் உயர்பள்ளி ஒன்றும் நடத்தப்படுகின்றன. தமிழ் மொழி வளர்ச்சிக்காகத் தமிழ்க்கல்லூரி ஒன்றும் தருமை ஆதீனத்தால் நடத்தப்பெறுகிறது. ஸ்ரீ குருஞான சம்பந்தர் உயர்பள்ளிக்கென்று தனியாகக் கட்டடம் கட்டுவதற்குத் தருமையாதீனம் 25-ஆவது ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமணி அவர்கள் அருளாட்சிக் காலத்தில் தரங்கம்பாடி நெடுஞ்சாலையில் தருமபுரம் ஷண்முகம் வளைவுக்கண்மையில் 19—4—70 இல் கால்கோள் விழாச் செய்யப்பெற்றது. பின்னர் 26-ஆவது ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்கள் அருளால் பெரும்பொருட் செலவில் வடிவமைத்துப் புதிதாக கட்டப்பெற்ற இப்பள்ளிக்கட்டிடத் திறப்பு விழா 10—2—78 வெள்ளிக்கிழமை பகல் 1 - 30 மணி யளவில் நிகழ்வுற்றது. தமிழ்நாடு அரசு கல்வி அமைச்சர், மாண்புமிகு. திரு. செ. அரங்கநாயகம் M.A., B.L., B.T., அவர்கள் கட்டிடத்தைத் திறந்துவைத்தார்கள். பள்ளி மாணவியர்கள் கடவுள் வாழ்த்துப் பாடினர். தருமையாதீனம் வேளூர்க் கட்டளை விசாரணை வித்துவான். ஸ்ரீமத் இராமலிங்கத் தம்பிரான் சுவாமிகள் பள்ளி நிர்வாகக் குழுவின் சார்பில் வரவேற்புரை வாசித்தளித்தார்கள். தலைமையாசிரியர் திரு. விவேகானந்தம் அவர்களால் அறிக்கை வாசிக்கப்பெற்றது. அடுத்து மாண்புமிகு. கல்வி அமைச்சர் அவர்கள், இப்பள்ளி நன்குவளரும்வாய்ப்புக்களை எடுத்துக் கூறிச்சிறப்புரையாற்றினார்கள். தலைமையாசிரியர் நன்றியுரைக்குப்பின் நாட்டு வாழ்த்துடன் விழா இனிதே நிறைவேறியது. மாயூரம் கோட்டாட்சியர் அவர்களும் தஞ்சை மாவட்டக் கல்வி அதிகாரி அவர்களும் மாயூரம் வட்டம் கல்வி அதிகாரி அவர்களும் மாயூரம் பெருமக்களும் மற்றும் பலரும்வந்திருந்து விழாவினைச் சிறப்பித்தார்கள்.

தருமையாதீனத்திற்குக்

## கல்வி அமைச்சர் அவர்களின் வருகை

தமிழ்நாடு அரசு, கல்வித்துறை அமைச்சர், மாண்புமிகு. திரு. செ. அரங்கநாயகம் M. A., B. L., B. T., அவர்கள் தருமையாதீனம் ஸ்ரீ குருஞானசம்பந்தர் உயர்நிலைப்பள்ளியின் புதிய கட்டிடத்தைத் திறந்துவைத்தபின்னர் தருமையாதீனத் திருமடாலயத்திற்குவந்து ஸ்ரீல ஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்களைத் தரிசித்து அருளாசிபெற்றார்கள். ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்கள் அமைச்சர் அவர்களுக்குப் பொன்னாடைபோர்த்தி அருளாசி வழங்கினார்கள். பின்னர் அமைச்சர் அவர்கள் மாயூரம் - தருமபுரம் ஸ்ரீ ஞானாம்பிகை அரசினர் மகளிர் கலைக்கல்லூரி ஆண்டு விழா நிகழ்ச்சியில் கலந்துகொண்டார்கள்.

## ஆயில்யத் திருநாள் வழிபாடு

தருமையாதீனம் 26-வது குருமகாசந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ சண்முக தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள் அவர்கள் மாத ஜன்ம நட்சத்திர வழிபாடு 25—1—78 புதன்கிழமையன்று திருஈங்கோய் மலையில் சிறப்புற நடைபெற்றது. அன்று மாலையில் ஸ்ரீ மரகதாசலேசுவரசுவாமிக்கும் ஸ்ரீ மரகதாம்பிகைக்கும் ஸ்ரீ தண்டபாணிக்கும் விசேஷ அபிஷேக ஆராதனைகளும் அர்ச்சனைகளும் நிகழ்த்தப்பெற்றன. விநாயகர் முதலிய பரிவார மூர்த்திகளுக்கும் அர்ச்சனை நிகழ்த்தப் பெற்றது. வழிபாட்டின்போது ஈங்கோய்மலைத் திருப்பதிக பாராயணம் நடைபெற்றது. தலத்திருப்பதிகங்கள் அடங்கிய நூல் அனைவர்க்கும் வழங்கப்பட்டது. வழிபாட்டிற்குப்பின்னர் சமய விரிவுரை நிகழ்ந்தது. திருச்சிராப்பள்ளி திரு. ப. மூக்கப்பிள்ளை அவர்கள் தமது தலைமையுரையில் தேவாரப்பாடல்பெற்ற தல வழிபாட்டின் இன்றியமையாமை பற்றிவிளக்கிப்பேசினார்கள். தருமையாதீனத்தமிழ்ப்புலவர், வித்துவான் திரு. வி. சபேசன் அவர்கள் திருஈங்கோய்மலைச் சிறப்புக்களையும் தலப் பதிகக் கருத்துக்களையும் விளக்கிப் பேசினார்கள். அன்பர்கள் பலர் வழிபாட்டில் கலந்துகொண்டும் விரிவுரைகளைக் கேட்டும் பயன் பெற்றனர்.

## அபிராமிபட்டர் அருள்பெறு திருநாள் விழாவும் ஏகாதச ருத்திராபிஷேகமும்

திருக்கயிலாய பரம்பரைத் தருமையாதீனத்திற்குச் சொந்தமான திருக்கடவூர் ஸ்ரீ அமிர்தகடேசுவரசுவாமி தேவஸ்தானத்தில் 7-2-78 செவ்வாய்க்கிழமை யன்று அபிராமிபட்டர் அருள்பெறு திருநாள் விழாவும், உலகநலங்கருதி மகந்நியாச பூர்வகஏகாதச ருத்திராபிஷேகமும் சிறப்பாக நடைபெற்றன. 7—2—78 செவ்வாய்க்கிழமையன்று

தை அமாவாசை ஆதலின் அன்று அபிராமி அம்மைக்குச் சிறப்பு வழிபாடும் ஸ்ரீ அபிராமி அம்மை உடனுறைகிய ஸ்ரீ அமிர்தகடேசுவரருக்கு உச்சிக்காலத்தில் மகந்நியாச பூர்வக ஏகாதச ருத்திராபிஷேகமும் அலங்கார ஆராதனைகளும், மதுரை சிவகாமி மில் அதிபர் திரு. கருமுத்து. சு. சொக்கலிங்கஞ் செட்டியார் அவர்களின் உபயமாக நடைபெற்றன. எல்லா மூர்த்திகளுக்கும் அபிஷேக ஆராதனைகளுடன் ஸ்ரீ அமிர்தகடேசுவரருக்குப் பஞ்சமுகார்ச்சனையும் ஸ்ரீ அபிராமி அம்மைக்கு நவசக்தி யர்ச்சனையும் ஸ்ரீ காலசம்ஹாரமூர்த்திக்கு சகஸ்ரநாமார்ச்சனையும் செய்யப்பெற்றன. தருமையாதீனம் ஸ்ரீலஸ்ரீ குருமகா சந்நிதானம் அவர்கள் வழிபாட்டிற்கு எழுந்தருளி வழிபாடாற்றி அன்பர்களுக்குப் பிரசாதம் வழங்கி ஆசியருளினார்கள். மதுரை திரு. கருமுத்து. சு. சொக்கலிங்கஞ்செட்டியார் அவர்களும் வழிபாட்டிற்கு வந்திருந்து வழிபட்டுத் திருவருட்பிரசாதம்பெற்று மகிழ்ந்தார்கள். திரு. செட்டியார் அவர்களுக்கு வழிபாட்டின் நிறைவில் பட்டுக்கட்டி மரியாதை செய்யப்பெற்றது. ருத்ராபிஷேகத்தின்போது 'நீள நினைந்தடியேன்' என்ற திருப்பதிகமும் 'இடரினும் தளரினும்' என்ற திருப்பதிகமும் கோளறு திருப்பதிகமும் பாராயணம் செய்யப்பெற்றன. மாலை வழிபாட்டின்போது அபிராமி அம்மை சந்நிதியில் அபிராமி அந்தாதி பாராயணம் செய்யப்பெற்றது. அபிராபட்டர் அருள்பெறு திருநாள் விழாவை முன்னிட்டு ஸ்ரீ அபிராமி அம்மை வழிபாட்டின்போது ஓதுவாமூர்த்திகள் நால்வருக்குப் பட்டுக்கட்டி அபிராமி அந்தாதிப் பாடல்களை ஓதச்செய்து ஒவ்வொரு பாடலும் முடிந்தவுடன் தீபாராதனை செய்யப்பெற்றது. அன்பர்கள் பலர் வழிபட்டுப்பயன் பெற்றனர்.

## வேளூரில் ஏகாதச ருத்ராபிஷேகம்

திருக்கயிலாய பரம்பரைத் தருமையாதீனத்திற்குச் சொந்தமான வேளூர் ஸ்ரீ தையல்நாயகி உடனுறைகிய ஸ்ரீ வைத்தியநாதசுவாமி தேவஸ்தானத்தில் 24—1—78 செவ்வாய்க்கிழமையன்று தருமையாதீனம் ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்களின் திருவுளப்பாங்கின்வண்ணம் மகந்நியாச பூர்வகஏகாதச ருத்ராபிஷேகம் உலகநன்மைக்காகச் சிறப்பாக நடைபெற்றது. தற்போதுள்ள பயிர்கள் நன்கு பலனளிப்பதற்காகவும் பிற்காலங்களிலும் பயிர்களுக்குப் பாதிப்பு ஏற்படாதிருக்கவும் இவ்வூரில் மட்டுமல்லாது மற்ற ஊர்களிலும் ஆங்காங்கே திருக்கோயில்களில் விசேஷ வழிபாடுகள் செய்வது அவசியம். அம்முறையில் வேளூரில் 24—1—78 அன்று தைப்பூச நன்னாளில் உச்சிக்காலத்தில் ஸ்ரீ தையல்நாயகி உடனுறைகிய ஸ்ரீ வைத்தியநாதசுவாமிக்கு ஏகாதச ருத்திர ஜபம், பாராயணம், அபிஷேகம், அர்ச்சனை முதலியன சிறப்பாக நடைபெற்றன. பக்தர்கள் பலர் காணிக்கைகள் செலுத்திப் பங்குகொண்டு திருவருள்பெற்றனர். ருத்திராபிஷேகத்

தின்போது சுந்தரர் நெல்மலை பெற்றபோது அருளிய 'நீள நினைந்தடியேன்' என்ற திருப்பதிகத்தையும், ஞானசம்பந்தர் உலவாக்கிழி பெற்றபோது பாடியருளிய 'இடரினும் தளரினும்' என்ற திருப்பதிகத்தையும் திருமுறைப்பண்ணிசைவாணர்கள்பதினொருமுறைபாராயணம் செய்தனர். ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்கள் எழுந்தருளி வழிபாடாற்றி அன்பர்களுக்குப் பிரசாதம் வழங்கி ஆசியருளினார்கள்.

## தைச்செவ்வாய்த் திருவிழா

தருமையாதீனம் வேளூர் ஸ்ரீ வைத்தியநாதசுவாமி தேவஸ்தானத்தில் செல்வமுத்துக்குமாரசுவாமிக்கு 29—1—78 ஞாயிற்றுக்கிழமை முதல் தைச்செவ்வாய்த்திருவிழாசிறப்பாகநடைபெற்றது. 29—1—78 அன்று துவஜாரோகணமும் 2—2—78 அன்று சகோபுரத்தில் மயில் வாகனக்காட்சியும் 6—2—78 அன்று திருத்தேர்விழாவும் 7—2—78 தைமாதக் கடைசிச்செவ்வாயன்று ஸ்ரீசெல்வமுத்துக்குமாரப்பெருமான் சித்தாமிர்த தீர்த்தத்தில் தீர்த்தம் கொடுத்தருளலும் நிகழ்ந்தன. இந் நாட்களில் நாள்தோறும் மாலை 6-மணி முதல் தொடங்கி சமய விரிவுரைகள் நடைபெற்றன. 31—1—78 அன்று புலவர். திரு. இரா. செல்வக்கணபதி எம்.ஏ., அவர்களும் 1-2-78அன்று தருமையாதீனத் தமிழ்ப்புலவர், வித்துவான், சிரோமணி, திரு. வி. சபேசன் அவர்களும் 2—2—78 அன்று தருமையாதீனத் தமிழ்ப்புலவர், வித்துவான். திரு. வி. சா. குருசாமி தேசிகர் எம். ஏ., அவர்களும் 3—2—78 அன்று வித்துவான். திரு. மு. சிவச்சந்திரன் எம். ஏ. அவர்களும் 4—2—78 அன்று வித்துவான். திரு. மு. ஆறுமுக தேசிகர் அவர்களும் முறையே திருமுருகாற்றுப்படை, கந்தரனுபூதி, திருப்புகழ், முத்துக்குமாரசுவாமி பிள்ளைத்தமிழ், கந்தரலங்காரம் ஆகிய தலைப்புக்களில் விரிவுரையாற்றினர். அன்பர்கள் பலர் செல்வமுத்துக்குமாரப் பெருமானைத் தரிசித்தும் விரிவுரைகளைக் கேட்டும் பயன்பெற்றனர்.

### திருச்சிராப்பள்ளி மௌனமடத்தில்

## ஸ்ரீமௌனகுரு, ஸ்ரீ தாயுமானசுவாமிகள் குருபூஜைவிழா

தருமையாதீனத்திற்குச் சொந்தமான திருச்சிராப்பள்ளி மலைக் கோட்டை மௌனமடத்தில் ஸ்ரீ மௌனகுருவிற்கும், அவர்களிடம் அருளுபதேசம்பெற்ற ஸ்ரீ தாயுமானசுவாமிக்கும் அவர்கள் திருவருட்பேறெய்திய தைமாதம் விசாக நாண்மீன்கூடிய நன்னாளாகிய 1—2—78 புதன்கிழமையன்று குருபூஜைவிழாவழிபாடும் நண்பகலில் மாகேசுவர பூஜையும் சிறப்பாக நடைபெற்றன.

குருபூஜை விழாவை முன்னிட்டுத் திருச்சிமலைக்கோயில் ஸ்ரீமாணிக்கவிநாயகருக்கும், ஸ்ரீ உச்சிப்பிள்ளையாருக்கும் ஸ்ரீ மட்டுவார் குழலம்மை உடனுறை ஸ்ரீ தாயுமான சுவாமிக்கும், ஸ்ரீ மௌனகுருவிற்கும், ஸ்ரீ தாயுமானவருக்கும் காலையில் விசேஷ அபிஷேக

ஆராதனைகள் சிறப்பாக நடைபெற்றன. அன்று மாலை 6-30 மணியளவில் நூற்றுக்கால் மண்டபத்தில் மௌனமடத்தின் சார்பில் பட்டிமண்டபம் நடைபெற்றது. திருச்சிராப்பள்ளி திரு.S. நடராஜன் B.A.B.L. (Chief Judicia Magistrate) அவர்கள் பட்டிமண்டபத்தைத் தொடங்கி வைத்துச் சிறப்புரை ஆற்றினார்கள். தாயுமானவர் திருப்பாடல்களில் விளங்கித் தோன்றுவது சிவபெருமான் பெருமையா? சிவனடியார் பெருமையா? என்ற தலைப்பில் பட்டிமண்டபம் நிகழ்ந்தது. சிவ பெருமான் பெருமையே! என்ற பொருளில் புத்தனாம்பட்டி திரு. அ. வ. இராசகோபாலன் M. A. B. T. அவர்களும் திருச்சி புலவர். திரு. மு. கணபதி அவர்களும், திருச்சி. இலஞ்சி. திரு. அ. இ. முத்துக்குமாரசாமி அவர்களும் வாதிட்டனர். சிவனடியார் பெருமையே! என்றபொருளில் தருமபுரம். புலவர், திரு. இரா. செல்வக்கணபதி M. A. அவர்களும், தருமபுரம். திரு. மு. சிவச்சந்திரன் M. A., அவர்களும், திருச்சி. புலவர். திரு. மு. வைத்தியநாதன் அவர்களும் வாதிட்டனர். திருச்சிராப்பள்ளி உருமு. தனலட்சுமி கல்லூரிப் பேராசிரியர் திரு. சோ. சத்தியசீலன் M. A. B. T. அவர்கள் நடுவராக இருந்து இருகட்சிகளின் கருத்துக்களையும் எடுத்து விளக்கி தாயுமானர் திருப்பாடல்களில் விளங்கித் தோன்றுவது சிவபெருமான் பெருமையே எனத் தீர்ப்புக் கூறினார்கள்.

---

## EXTRACT FROM THE VISITORS' BOOK

Dharmapuram Adhinam

Sri Vaithianathaswami Devasthanam, Vaithiswarankoil.

Exceedingly delighted to be in the ancient sacred shrine. May God bless our country and all of us.

19—2—78. (S-d.) Brabudas B. Patwari.

Dharmapuram Adhinam

Sri Amirthagateswaraswamy Devasthanam, Tirukkadaiyur.

We pray God and Godesses may bless us all.

19—2—78. (S-d.) Brabudas B. Patwari.

# எதிர்காலம்

## ஜோதிஷம், திரு. A. இராசமாணிக்கம்

ஸ்ரீ குமரகுருபர சுவாமிகள் நடுநிலைப்பள்ளி, திருப்பனந்தாள்.

**( பிங்களஹு மாசிமீ 1உ முதல் 30உ முடிய )**

**( 13—2—1978 முதல் 13—3—1978 முடிய )**

பிங்களஹு தைமீ 30உ பானுவாரம் அசுவதி நக்ஷத்திரத்தில் கௌலவகரணம் கூடிய காலத்தில் சூரிய உதயம் முதல் 32 நாழிகை 42 விநாடிக்கு சிம்ம லக்கினத்தில் லோகரட்சகரான சூரியபகவான் லோக சுபிட்சார்த்தமாக மகர ராசியிலிருந்து கும்ப ராசி சங்கிரமண மாக மாசிமாதப்பிரவேசம் செய்கிறார். அன்று விஷ்ணுபதி புண்ணிய காலமாகும். மறுதினம் மாசிமாதம் முதல்தேதியாகிறது. சங்கிரமண கால கிரகஸ்திதியின் பலனாவது எல்லாவகை உணவுப்பயிர்களும் அதிகமாக விளைந்து லோகத்தில் சுபிட்சம் ஏற்படும். வியாபார மார்க்கெட்டுகளில் கருத்தவஸ்துக்களாகிய உளுந்து, எள், எண்ணெய் முதலியனவும், இயந்திரங்கள் இயந்திரங்களுக்கான உறுப்புக்கள், எவர்சில்வர் பாத்திரங்கள் ஆகியவைகளும் விலை ஏற்றமாக இருந்து வரும். வெல்லம், மிளகாய், துவரை, கடலை, மொச்சை, நெல், கோதுமை முதலிய அத்தியாவசியப்பொருள்களின் விலை மலிவாகி வரும். தங்கம் வெள்ளி விலை உயரும். லோகத்தில் அதர்மங்கள் நீங்குவதாகி பிரஜைகள் உய்ய மார்க்கங்கள் ஏற்படும். தெய்வத் திருவருளினால் நியமனமாகின்ற - பரிபாலிக்கின்ற பிரஜாபிரதிநிதிகள் தேசத்தலைவர்கள் இலட்சுமிகடாக்ஷம் பொருந்த ஆஸ்திகவழிப் பற்றி அறநெறி பரிபாலனம் நடத்துவர். பிரஜாசௌகரியம் மேலிடும்.

உலகிலுள்ள திருமடங்கள் ஆசாரிய பீடங்களில் சிவப்பொலிவுடன் விளங்குகின்ற குருமகான்கள் லோகத்திற்குத் திருவாய்மலர்ந்து உபதேசிக்கின்ற உயர்வழியில் லோகதர்மம் முதலான பரிபாலனநீதிகள் பிரதாபத்துடன் நடந்துவரும். தேசங்கள் எங்கும் தேவாலயங்களில் ஆறுகால பூசைகள் சிறப்புப்பூசைகள் நெறிமுறையுடன் நடந்துவரும். சகலமான பிரஜைகளும் திரிகரணசுத்தியுடன் நல்வாழ்க்கை நடத்துவார்கள்.

1. மேஷம் :- அசுவதி - பரணி - கார்த்திகை $\frac{1}{4}$

( சு. சே. சோ. லா. - லி. லு. லே. லோ. - அ. )

மேஷ ராசி 9 பாதங்களும் சுபமான பலனுக நடந்துவரும். குடும்பத்தில் மூன்றுவித பணவருமானங்கள் திருப்தியாகவந்துசேரும். சகோதரர் நலம் நன்ருக இருந்துவரும். வாகன பிராப்தி சுகசௌகரி யங்களில் நிம்மதி பலன் தரும். வித்தியாவியாபாராதி கலைநுணுக்கங் களில் செல்வாக்கு, வெகுமதி, அரசாங்கத்தில் அனுகூல நிலைமை ஏற்படும். தாரபுத்திரர்களின் சௌக்கியம் திருப்தியாக இருந்துவரும். விவகாரங்களில் ஜெயம்தரும். செய்தொழிலில் எல்லா அலுவல்களை யும் திடமாக நடத்திவரும். திங்கள் செவ்வாய் சுபமாகும்.

2. ரிஷபம் :- கார்த்திகை $\frac{3}{4}$ - உரோகிணி - மிருகசீர்ஷம் $\frac{1}{2}$

( இ. ஊ. ஏ. - ஒ. வ. வி. வு - வே. வோ. )

ரிஷப ராசி 9 பாதங்களும் சுபபலன் தரும். புதனுக்கு அஸ்தங்க தோஷம் விலகுகின்ற 11உக்குமேல் ஓர் கணிசமான பொருள் வந்து சேரும். வாக்குறுதியான பேச்சு, அதன்படியான நடைமுறை, மனுேதிடமாகச் செயலாற்றும் வன்மை ஆகியவற்றில் அந்தஸ்து உயரும். வீடு வாகன பிராப்தியில் மாதப்பின்பகுதில் ஓர் அதிர்ஷ்டம் வரும். தாரபுத்திரர்களின் சுகங்களில் மகிழ்ச்சிதரும். செய்தொழில் அல்லது உத்தியோகத்தில் இராசாங்க நன்மைகளை ஏற்படுத்தித்தரும். புதன் வியாழன் சுபமாகும்.

3. மிதுனம் :- மிருகசீர்ஷம் $\frac{1}{2}$ - திருவாதிரை - புனர்பூசம் $\frac{3}{4}$

( கா. கி. - கு. க. ங. ச்சா. - கே. கோ. ஹ. )

மிதுன ராசி 9 பாதங்களும் மிச்சிரபலனுக நடக்கும். குடும்பாபி விருத்தியில் சமயோசிதமாக ஏற்பட்டுக்கொண்டிருக்கும். இருப் பினும் எதிர்பாராத செலவினங்களும் ஏற்படுதல்காணும். பூமி இயந்திரவகையில் அலைச்சலாகும். விவகாரம் ஏற்படும். ஆயினும் ஆதாயபலனுகவே இருந்துவரும். பந்து அம்மான் பிதுரு இவர்களின் சொற்பகுறைகள்வரினும் பின்பகுதியில் அவைதீர்ந்து சரிபடுதல் ஆகும். கால்நடை வாகனத்திற்கு சர்ப்பதோஷம் சம்பவிக்கும். தாரபுத்திரர்களின் நலம் திருப்திதரும். செய்தொழிலில் எல்லா அலுவல்களும் நன்முறையில் நடந்துவரும். வெள்ளி சனி சுபமாகும்.

4. கடகம் :- புனர்பூசம் $\frac{1}{4}$ - பூசம் - ஆயில்யம்

( ஹி. ஹு. ஹே. ஹோ. ட. - டி. டு. டே. டோ. )

கடக ராசி 9 பாதங்களும் சுமார்பலனுக நடக்கும். குடும்பத்தில் பண ஆதாயங்கள் வந்துகொண்டிருக்கும். சகோதரர்களுக்கு சுபிட்ச

நிலைமையை ஏற்படுத்தும். வீடு வாகனாதிகளில் புதுமை ஏற்படும். வித்துவத்துவம் கலைத்துறைகள் சிறக்கும். உடலில் உஷ்ணவாத நலிவு ஏற்பட்டுக்குணமாகும். சனீஸ்வர சகஸ்ரநாம அருச்சனைசெய்ய நலமாகும். அபமிருத்துபயம் நீங்கும். புத்திரனாலும் மனைவிவழியிலும் செலவு மிகும். செய்தொழிலில் மேன்மைஸ்திதியை உண்டு பண்ணும். பெரிய காரியங்களுக்கு முதலீடு செய்விக்கும். ஞாயிறு திங்கள் சுபமாகும்.

**5. சிம்மம் :- மகம் - பூரம் - உத்திரம் ¼**

( ம. மி. மு. மே. - மோ. ட. டி. டு. - டே. )

சிம்ம ராசி 9 பாதங்களும் மிச்சிரபலனாக நடக்கும். குடும்பாபி விருத்தியில் பணவருமானங்கள் நல்ல நிலைமையில் வரவாகிக்கொண்டிருக்கும். சகோதரர்கள் நலம் சாதாரணமாக இருந்துவரும். வித்தியா வியாபாராதி கலைத்துறைகளில் உழைப்புக்கேற்ற பலன் வரும். அடிக்கடி வெளியில் பயணம் ஏற்படும். ஞாயிற்றுக்கிழமை சூரிய அர்ச்சனை செய்ய கண் எரிச்சல், இருமல் போன்ற நலிவுகள் நீங்கும். ஸ்திரீவழியில் ஓர் செலவு ஏற்படும். செய்தொழிலில் மாதப்பின்பகுதியில் ஓர் நற்பலன் கொடுக்கும். திங்கள் செவ்வாய் சுபமாகும்.

**6. கன்னி :- உத்திரம் ¾ - ஹஸ்தம் - சித்திரை ½**

( டோ. பா. பி. - பு. ஷ. ண. ட. - பே. போ. )

கன்னியாராசி 9 பாதங்களும் சுமாரான பலனைத்தரும். குடும்பாபி விருத்தியில் பணவருமானம் போஜன சௌகரியங்களில் குறைவின்றி நிறைவு தரும். பூமி இயந்திர வகையில் பிரயாசையினால் பலன்கள் ஏற்பட்டுவரும். வித்தியாவியாபாராதி கலைத்துறைகளில் முன்னேற்றம் ஏற்படும். தாரபுத்திரர்களினால் ஒரு புறம் மனஆயாசம் ஒருபுறம் நன்மை ஏற்படுதல் ஆகும். செய்தொழிலில் மாதப் பின்பகுதியில் ஓர் மாறுதல் சம்பவிக்கும். புதன் வியாழன் சுபமாகும்.

**7. துலாம் :- சித்திரை ½ - சுவாதி - விசாகம் ¾**

( ர. ரி. - ரு. ரே. ரோ. தா. - தி. து. தே. )

துலாராசி 9 பாதங்களும் மிச்சிரபலனாக நடக்கும். குடும்ப அபிவிருத்தியில் தன வரவு செலவுகள் சரி சமனாகஇருந்துவரும். பூர்வ சொத்திலிருந்து ஓரளவு நற்பலன் வந்து சேரும். வித்தியா வியாபாராதி கலைத்துறைகளில் சாதாரணபலனாக இருந்துவரும். வீடு வாகனங்கள் சுக சௌகரியங்களில் சமபலனாக இருந்து வரும். வயிற்றில் அஜீர்ணம். வந்து குணமாகும். ஞாயிற்றுக்கிழமையில் சூரியார்ச்சனை செய்ய

நலம்தரும். தார புத்திரர்களின் செளக்கியம் சாதாரணமாக இருந்து வரும். செய்தொழிலில் அலுவல்கள் தாமதப்போக்காக இருந்துவரும். வெள்ளி, சனி சுபமாகும்.

**8. விருச்சிகம் :- விசாகம் ¼ அனுஷம் – கேட்டை.**

(தோ. - ந. நி. நு. நே. - நோ. ய. யி. யு.)

விருச்சிக ராசி 9 பாதங்களும் சுமார்பலனுக நடக்கும். குடும்பாபி விருத்தியில் தன வரவுகளில் தர்க்கங்களும் மறைமுக எதிர்ப்புக்களும் ஏற்படச் செய்யும். சகோதரர் நலம் சாதாரணமாக இருந்துவரும். இராசிக்கு ஓர் விபத்து சம்பவிக்கும். ஸ்ரீ சுப்பிரமணிய சுவாமிக்கு அருச்சனைசெய்யநலம். வித்துவத்துவத்தில் நற்பலன் ஏற்படுவதாகவே இருந்துவரும். நூதனமான ஓர் வாகனம் வாங்குதல் ஆகும். தன் ஸ்திரீக்கு கெற்பத்தில் நலிவு வந்து குணமாகும். செய்தொழில்கள் மதிப்புடன் நடந்துவரும் ஞாயிறு, திங்கள் சுபமாகும்.

**9. தனுசு :- மூலம் – பூராடம் – உத்திராடம் ¼**

(யே. யோ. பா. பி. பு. த. ப. ட. - பே.)

தனுர் ராசி 9 பாதங்களும் சுமார் பலனுக நடக்கும். குடும்பத்தில் தன வரவுகள் சீரான நிலைமையில் இருந்துவரும். வரவேண்டிய பொருள்கள் வருவதற்கு காலதாமதப்படும். சகோதரர் ஒத்துழைப்பு அனுசரணைகளில் மனமாறுதலாகத் தோன்றும். வித்துவத்துவக் கலைத்துறையில் மாதப்பின்பகுதியில் ஓர் ஆதாரமும் புகழும் ஏற்படும். புத்திரர்களின் ஜீவனோபாயங்களில் சிரமம் தோன்றும். பின்பகுதி சமாளிக்கும் ஆற்றல்தரும். மனைவி நலம் சாதாரணமாக இருந்து வரும். செய்தொழிலில் உள்ள பிரச்னைகளைத்தீர்க்க அல்லல் தோன்றினும் சமாளித்தல் ஆகும். செவ்வாய் புதன் சுபமாகும்.

**10. மகரம் :- உத்திராடம் ¾ – திருவோணம் – அவிட்டம் ½**

(போ. ஜ. ஜி. - கி. கு. கே. கோ. - கா. கி.)

மகர ராசி 9 பாதங்களும் மிச்சிரபலனுக நடக்கும். குடும்பத்தில் தன வரவுகள் கௌரவத்திற்கேற்ப வந்துகொண்டிருக்கும். சகோதரருக்கு நன்மைகள் பல ஏற்படும். வீடு வாகனுதி செளகரியங்களில் நல்ல நிலைமையாக இருந்துவரும். மனோ தைரியத்தினுல் எல்லா காரியங்களையும் செயல்படுத்துதல் ஆகும். தாம்பத்திய வாழ்க்கையில் செளகரியங்கள் பொருளாதாரத்தில் பெரியோர்களினுல் சகாயங்கள் ஏற்படும். செய்தொழிலில் எழுத்துமூலியத்தில் நற்பலன்வரும். சனி ஞாயிறு சுபமாகும்.

**11. கும்பம் :- அவிட்டம் ½ – சதயம் பூரட்டாதி ¾**

( கு, கே. - கோ. ஸ. ஸி. ஸு. - ஸே. ஸோ. தா. )

கும்பராசி 9 பாதங்களும் சாதாரண பலனுக நடந்துவரும். தன சௌகரியங்களில் குறைவின்றி நிறைவாகவே இருந்துவரும். சகோதரர் நலம் சாதாரணமாக இருந்துவரும். உடலில் உஷ்ணுதிக்கம் வயிற்று வலி போன்ற நலிவு வந்துகுணமாகும். ஸ்ரீ சுப்பிரமணிய சுவாமிக்கு அருச்சனை செய்ய நலம்தரும். இராசாங்க கெடுபிடியான சில அல்லல்கள் ஏற்படினும் சமாளித்தல்ஆகும். தாரபுத்திரர்களின் நலம் நன்ருக இருந்துவரும். செய்தொழிலில் மன சங்கடத்துக்கிடையே நன்மையையும்தரும். திங்கள் செவ்வாய் சுபமாகும்.

**12. மீனம் :- பூரட்டாதி ¼ – உத்திரட்டாதி – ரேவதி.**

( தி. து. ஸ. ச. த. - தே. தோ. ச. சி. )

மீனராசி 9 பாதங்களும் மிச்சிரபலனுக நடக்கும். குடும்பாபிவிருத்தியில் பண வரவு செலவுகள் சரிசமனுக இருந்துவரும். ஒரு ஆர்பாட்ட செலவைச்செய்யநேரும். சகோதரி வழியில் பெருங் குறை ஒன்று வந்து சரிபடும். வித்தியா வியாபாராதிகளில் செலவுடன் கூடிய ஓர் நற்பலன் ஏற்படும். வீடு வாகனுதிகளில் செலவுமிகும். செந்நெல் பிராப்தி ஓரளவு வரும். அதற்குச் சமனுன பணமுடக்கமும் வரும், தன் ஸ்திரீக்கு சிரோபாதைவந்து நீங்கும். செய்தொழிலில் ஸ்லாக்கிய பலன் தரும். புதன் வியாழன் சுபமாகும்.

## மகாசிவராத்திரி

குறிப்பு:- பிங்கள ஸு மாசி மீ 23உ (7-3-1978) செவ்வாய்க்கிழமை கிருஷ்ண பட்ச சதுர்த்தசி யன்று **மகாசிவராத்திரி** வருகிறது. அது ஒரு முக்கியமான விரததினமாகும். அன்று உபவாசம் இருந்து சிவாலயம் சென்று இரவு நான்கு யாமமும் நித்திரையின்றி சிவ பெருமானை வழிபட்டுப் பூசித்தல் வேண்டும். நான்கு யாமமும் நித்திரை யொழிக்க இயலாதவர் இலிங்கோற்பவ காலம் அதாவது இரவு 14 நாழிகைக்குமேல் 3¾ நாழிகை வரையிலாவது நித்திரை யொழித்தல் வேண்டும். இந்த விரதம் துக்கங்களைப் போக்கிச் சுகத்தைக் கொடுக்கிறது. ஆகையால் ஒவ்வொருவரும் சிவராத்திரி விரதம் இருக்கவேண்டியதவசியமாகும்.